உ

கடவுள் துணை.

செந்தமிழ்.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தினின்று மாதந்தோறும்வெளிவரும்

ஒரு தமிழ்ப் பத்திரிகை.

"எனைத்தானு நல்லவை கேட்க வனைத்தானு
மான்ற பெருமை தரும்"—திருவள்ளுவர்.

தொகுதி-௩௨] பவஹுபங்குனிமீ [பகுதி-௫.
Vol. XXXII. March-April 1935. No. 5.

உள்ளுறை.

மஹாமஹோபாத்தியாய ஐயரவர்களின் ஸதாபிஷேகக்கொண்டாட்ட நிகழ்ச்சியும் வாழ்த்தும்:— ௨௪௧—௨௪௬

எண்பத்தொன்றும் பிறந்தநாள்:— ஸ்ரீமத். ஊ. சா. வேங்கடராமையர் ௨௫௦—௨௫௨

பரிசோதனைத்தொடர்:— ,, T. N. அப்பனையங்கார் ௨௫௩—௨௫௬

கம்பராமாயண இன்கவித்திரட்டு:— ,, ராவ்ஸாஹிப். வெ. ப. சுப்பிரமணிய முதலியார், G B. V.C. ௨௫௭—௨௬௪

காலம்:— ,, வித்வான் K. S. விஸ்வநாத சாஸ்த்ரியார் P O L. ௨௬௫—௨௭௧

மதிப்புரை:— ௨௭௧—௨௭௨

பெருந்தொகைப் பொருட்குறிப்பகராதி: ,, மு. இராகவையங்கார் 1–6

குருகைமான்மியம்:— T. K இராமாநுஜையங்கார், உதவிப்பத்திராசிரியர். 281–296

பத்திராசிரியர்—திரு. நாராயணையங்கார்.

வருஷம் ஒன்றுக்கு ரூ 4 | தனிப்பிரதி அணா—8
வெளிநாடுகளுக்கு ரூ 4—8—0

1935.

Printed by Srimathu R. Shanmuga Rajeswara Naganatha Sethupathy Avergal and published by Thiru. Narayana Iyengar at the Tamil Sangam Power Press, No. 54, New Jail Road, Madura.

உ

ஒரு வேண்டுகோள்.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தினின்று மாதமொருமுறை வெளிவரும் இச்செந்தமிழ்ப்பத்திரிகையில் வெளியிடுமாறு பொருளுரைகளும், மதிப்புரைவேண்டிப் புத்தகம் முதலியனவும் அனுப்புவோர் அவற்றைப் பத்திராசிரியர், செந்தமிழ், மதுரைத்தமிழ்ச்சங்கம், மதுரை என்று விலாசமிட்டும்,

செந்தமிழில் வெளியிடுமாறு அனுப்பும் விளம்பரங்களையும், பாண்டியன்புத்தகசாலைக்கு நன்கொடையாக அனுப்பும் புத்தகம் முதலியவைகளையும், செந்தமிழ் செந்தமிழ்ப்பிரசுரங்கள் தமிழ்ச்சங்கப் பிரசுரங்கள் சங்கக்கலாசாலை சங்கப்பரீக்ஷைகள் முதலியவைசம்பந்தமாக அனுப்பும் கடிதங்கள் மணியார்டர்கள் முதலியவற்றையும், இன்னும் இச்சங்கசம்பந்தமாயறியவிரும்பியெழுதும் பிறவற்றையும் மானேஜர், மதுரைத்தமிழ்ச்சங்கம், மதுரை என்று விலாசமிட்டும் அனுப்புமாறு இதன்மூலம் கேட்டுக்கொள்ளலாயிற்று.

லக்ஷ்மீநாராயணையர்,
மானேஜர்.

உ

கடவுள் துணை.

செந்தமிழ்.

தொகுதி-௩௨.]   பவ ஸ்ரீ பங்குனிமீ   [பகுதி-௫.

Vol. XXXII.   *March-April 1935.*   **No. 5.**

மஹாமஹோபாத்யாய ஐயரவர்களின்

ஸதாபிஷேகக்கொண்டாட்டம்.

அமுதினும் இனிய தமிழ்மொழியும் தமிழ்நாடும் செய்த தவப்பேற்றால் உத்தமதானபுரத்துதித்துத் தமிழணங்கைப் பல்லாண்டுகளாகத் தாமியற்றும் நற்பணிகளால் அலங்கரித்துவருபவர்களாகிய ப்ருஹ்மஸ்ரீ மஹாமஹோபாத்யாய த்ராவிடவித்யாபூஷண தாக்ஷிணாத்யகலாநிதி டாக்டர் உ. வே. சாமிநாதையரவர்களின் ஸதாபிஷேக மஹோத்ஸவக் கொண்டாட்டம், நாளிது பவ ஸ்ரீ மாசிமீ 23௳ (6—3—35) புதன்கிழமை மாலை 5½ மணிமுதல் 8½ மணிவரை மதுரைத்தமிழ்ச்சங்க மண்டபத்தில் மதுரைத்தமிழ்ச்சங்கத்தாராலும் மதுரை ராமநாதபுரம் ஜில்லா பண்டிதர்சங்கத்தாராலும் ஒருங்குசேர்ந்து பெருஞ்சிறப்பாகக் கொண்டாடப்பெற்றது.

அவ்வமயம் தமிழபிமானமிக்க புலவர்பெருமக்களும் வழக்கியலறிஞர்களும் செல்வர்களும் மாணவர்களும் பிறரும் திரளாக விஜயம்செய்திருந்தனர்.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தின் உபாக்ராஸநர் ஸ்ரீமான் T. C. ஸ்ரீநிவாஸையங்காரவர்கள் B.A., B.L., M.L.C. அக்ராஸநராக வீற்றிருக்கக் கடவுள்வாழ்த்துடன் ஸபைநிகழ்ச்சி தொடங்கிற்று.

முதலில் மதுரைத் தமிழ்ச்சங்கத்தார் சார்பாக, மஹாமஹோபாத்யாயஐயரவர்களின் அருமை பெருமைகளைப் பாராட்டிச்

செந்தமிழ் உதவிப்பத்திராசிரியர் T. K. இராமநுஜையங்கார் இயற்றிய வாழ்த்துப்பத்திரம் அவரால் படிக்கப்பட்டது. அதன்மேல் தமிழ்ச்சங்கக் கலாசாலை ஆசிரியர் ஸ்ரீமத் பண்டித ஹரிஹரையரவர்கள் தாம் இயற்றிய வாழ்த்துப்பாடல்களையும், யாழ்ப்பாணத்துப் பரமேசுவரக்கல்லூரித் தமிழாசிரியர் ஸ்ரீமத் K. S. நவநீத கிருஷ்ணபாரதியவர்கள் இயற்றியனுப்பியிருந்த நாண்மங்கல வாழ்த்தையும், கும்பகோணம் நேடிவ்ஹைஸ்கூல் தமிழாசிரியர் ஸ்ரீமத். ஊ. சா. வேங்கடராமையரவர்கள் எழுதியனுப்பிய எண் பத்தோன்றும் பிறந்தநாள் என்ற கட்டுரையையும் படித்தார்கள்.

பின்பு மதுரை அமெரிக்கன்கல்லூரித் தமிழாசிரியர் திரு. ஆ. கார்மேகக்கோனாரவர்கள், யாழ்ப்பாணத்துத் தமிழ்த்தொண்டன் பத்திராசிரியர் திரு. V. M. கனகசுந்தரம் அவர்கள், மதுரையிலுள்ள இராமேசுவர தேவஸ்தான மஹாபாடசாலைப் பிரின்ஸிபால் ஸ்ரீமத். V. சுப்பிரமணிய ஐயரவர்கள் B.A., L.T., ஸ்ரீ. உ. வே. வித்வான் காண்டூர் ராமாநுஜாசாரியரவர்கள், ரிட்டயர்டு சிரஸ்தார் திரு. முத்திருளாண்டிபிள்ளையவர்கள், மதுரைக் கல்லூரி ஆசிரியர் ஸ்ரீமத். C. V. கிருஷ்ணமூர்த்திராவ் M. A. அவர்கள், திரு. R. ராமஸ்வாமி அவர்கள், மதுரைக்கல்லூரித் தமிழாசிரியர் திரு. பண்டித. ஆ. அரங்கராமாநுஜம்பிள்ளையவர்கள், மதுரை அமெரிக்கன் கல்லூரி மாணவர் குருசாமி, ஸ்ரீநிவாஸன்—ஆகிய இவர்கள் இற்றைக்கு ஐம்பது ஆண்டுகளுக்குமுன் தமிழ்மொழியடைந்திருந்த தாழ்நிலையையும், பின் ஐயரவர்கள் நன்முயற்சியால் தமிழ்மொழியடைந்த உயர்நிலையையும், ஐயரவர்களாற்றிவரும் தமிழ்ப்பணியின் சிறப்பினையும், அவர்களுடைய ஞானசீலங்களையும், பெருந்தகைமையினையும், அவர்கள் தம்பால்வரும் மாணவரைப் பலகலையுணரும் பருணிதராகப் பயிற்றுவிக்கும் பான்மையினையும், அவர்கள் தம் ஆசிரியரிடத்துக்கொண்ட பெரும்பற்றினையும் பலபடியாகவிரித்துபந்யசித்தார்கள்.

பின்னர், செந்தமிழ்ப் பத்திராசிரியர் ஸ்ரீ. உ௸. வே. திரு. நாராயணையங்காரவர்கள், ஐயரவர்கள் தம்நூற்பதிப்புக்களால் தமிழ்மொழிக்குச்செய்துவரும் பேருபகாரத்தையும், மாபிற்றிரியா

மாண்பினவாக உரையும் பாட்டு மியற்றும் ஐயரவர்களின் நிறை பேராற்றலையும் பாராட்டி, ஐயரவர்கள் ஜீவியசரிதம் தமிழுலகுக்குப் பலவகையாலும் மிகுந்த பயனளிக்கத்தக்கதென்றும், அதனை ஒருசிறிதும் எஞ்சாதெழுதல் அவர்களுக்கே இயல்வதென்றும், மேனாட்டறிஞர் தம்சரிதம் தாமே எழுதியுதவுதல்போல இவர்களும் தமிழறிஞர்வேண்டின் தம்சரிதம் எழுதியுதவ இசையக்கூடுமென்றும் பேசி,

"ப்ருஹ்மஸ்ரீ மஹாமஹோபாத்யாய திராவிடவித்யாபூஷண தாக்ஷிணாத்யகலாநிதி டாக்டர் உ. வே. சாமிநாதையரவர்களை அவர்களுடைய ஜீவியசரித்திரத்தை அவர்களே எழுதித்தர வேண்டுமென்று இச்சபையார் கேட்டுக்கொள்ளுகிறார்கள்"

என்ற பிரேரணையை விவரித்துப் பிரேரிக்க, மதுரைப் புத்தக வர்த்தகரும் தமிழ்வளர்ச்சியிற் பெரும்பற்றுடையவரும் அதற்கு உதவிவருபவரும் ஆகிய ஸ்ரீமான். இ. மா. கோபாலகிருஷ்ணக் கோனாரவர்கள் ஐயரவர்கள் சரிதம் புத்தகஉருவில் வெளிவருவது மிகவும் அவசியமென்று வற்புறுத்தி ஆமோதிக்க, ஸபையோரால் பெருமகிழ்ச்சியுடன் ஒருமுகமாக அங்கீகரிக்கலாயிற்று.

அதன்மேல், ஸபைத்தலைவரான ஸ்ரீமான் T. C. ஸ்ரீநிவாஸையங்காரவர்கள், தமிழ்மொழியையும் தமிழ்ப்புலவர்களையும் ஸேதுமன்னர்முதலிய புரவலரும், திருவாவடுதுறைமுதலிய ஆதீன கர்த்தர்களும் ஆதரித்துப் போற்றிவருமாறும், ஐயரவர்களுக்கு ஆசிரியராகிய மஹாவித்வான் மீநாக்ஷிசுந்தரம்பிள்ளையவர்கள் சீர்மை விளங்குமாறும், ஐயரவர்கள் பிள்ளையவர்களாலும், திருவாவடுதுறையாதீனகர்த்தர் ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணியதேசிகராலும், சுப்பராய செட்டியார் தியாகராயசெட்டியார் சேலம் ராமஸ்வாமி முதலியார் அரங்கநாதமுதலியார் முதலிய தக்கோர்களாலும் நன்கு மதிக்கப் பெற்றவாறும், சிந்தாமணிமுதலிய நூல்கள் அச்சிற்பதிக்கப்பெற்றவாறும், ஐயரவர்களுடைய இடைவிடா உழைப்பும் ஊக்கமும் இத்தகையவென்பதும், ஐயரவர்கள்சரிதம் தமிழ்மக்களுக்கு இன்றியமையாது வேண்டப்படுவதொன்றென்பதும், அதனை யெழுதத்தக்கவர்கள் அவர்களே என்பதும், அதனை அச்சிட்டு வெளி

யிடத்தக்கார் அது விஷயமான பிரேரணையை ஆமோதித்துப்பேசிய ஸ்ரீமான் கோபாலகிருஷ்ணக்கோனாரவர்களே என்பதும் நன்கு விளங்கச் சற்றேறத்தாழ ஒரு மணிநேரம் அரியதோர் விரிவுரையாக முடிப்புரைகூறினார்கள்.

பின்னர் மதுரைத்தமிழ்ச்சங்கத்தின் கௌரவகாரியதரிசியவர்களாகிய ஸ்ரீமான் N. R. கிருஷ்ணஸ்வாமிஐயங்காரவர்கள் வந்தனோபசாரங்கூறுமுகத்தால் ஐயரவர்களுடைய நன்முயற்சியால் தமிழ்மொழியேயன்றித் தமிழ்நாடும் பிறர் நன்குமதிக்கத்தக்கநிலையையடைந்ததென்றும், தமக்கு அவர்களுடன் நெருங்கிய பழக்கமுண்டென்றும், அவர்களுடைய குணவிசேஷங்கள் மிகவும் கொண்டாடத்தக்கனவென்றும்கூறி, ஐயரவர்கள் இன்னும் பல்லாண்டு அரோகதிடகாத்திரராய் வீற்றிருந்து தமிழ்ப்பணிபுரிந்துவாழ அருள்புரியுமாறு எல்லாம்வல்ல இறைவனைப்பிரார்த்தித்து, சங்கத்தார் அழைப்புக்கிணங்கி இக்கொண்டாட்டத்துக்குவந்து ஸபையை அலங்கரித்த கனவான்களுக்கும், உபந்யஸித்துக் கொண்டாட்டத்தைச் சிறப்புறச்செய்த புலவர்பெருமக்களுக்கும் நன்றிசெலுத்தக் கடவுள்வாழ்த்துடன் ஸபைநிகழ்ச்சி இனிது நிறைவெய்தியது.

சங்கத் தமிழ்ப்பனுவல் சாலப் பதித்துதவி
எங்கட் கிதயத் திருள்கடிந்து—தங்குதலால்
ஓராழியான்போல் உலகுதொழ வாழிபெரும்
பேரா சிரியர் பிரான்.

T. K. இராமாநுஜையங்கார்.
உதவிப்பத்திராசிரியர்.

மஹாமஹோபாத்யாய திராவிடவித்யாபூஷண தாக்ஷிணாத்யகலாநிதி Dr.

ப்ருஹ்மஸ்ரீ உ. வே. சாமிநாதையரவர்களின்

எண்பதாம் ஆண்டுநிறைவுவிழாக்கொண்டாட்டம்

6—3—35ல் மதுரைத்தமிழ்ச்சங்கத்தில் நிகழ்ந்தபொழுது

மதுரைத்தமிழ்ச்சங்கத்தார் படித்த

வாழ்த்துப்பத்திரம்.

பூமடந்தை பொலிவுபெறப் புகழ்மடந்தை களிகூரப் புலவர் போற்ற
நாமடந்தை நலஞ்சிறக்க நல்லவர்பல் லாண்டிசைக்க நன்மை சான்ற
பாமடந்தை யுளங்குளிரப் பைந்தமிழ்செந் தமிழாகும் பான்மை மேவ
நாமடைந்த பெரும்பேற்றால் எல்லோருங் கொண்டாடும் நன்னா ளிந்நாள்.

பல்லாண்டு பயின்றாலும் பொருளுணர்தற் கரியதமிழ்ப் பனுவ லெல்லாம்
சில்லாண்டுபயில்பவருந்தெரிந்துரைக்கப்பொறித்தளித்ததேசான்மிக்கோன்
சொல்லாண்ட தமிழ்ப்புலமைச் **சாமிநா தப்பெரியோன்** தோன்றி நீண்ட
நல்லாண்டு நாலிருபா னெனநிகழா நின்றதிந்த நன்னாண் மன்னோ.

முதலைவாய்ப் படுகளிறு காத்தளித்த முகில்போல முதுநூ லெல்லாம்
சிதலைவாய்ப் படுமளவி லிறவாது காத்தளித்த செம்மல் அம்மா!
குதலைவாய்ப் படுமினிய தமிழ்மொழியின் குற்றேவல் கொள்ளற் கேற்ற
மதலையாய்ப் பணிபலவும் புரிந்தனனால்; அவைசொல்ல வல்லார் யாரே.

கற்பினுயர் கலைமகளுக் கினியபொரு ளுரைபலவும் கற்பித் துள்ளோன்
அற்பினுயர் மாணவருக் கருந்தமிழ்நூற் பொருளனைத்தும் அளிக்கும் நீரான்
பொற்பினுயர் கவிபாடும் புலமையினுந் தலைமையுளோன் புவியுள் ளோர்கள்
பிற்பினுயர் வடையும்வகை நூல்பொறித்தீந் திடுதிறத்தும் பெரியோ னுமால்.

பாராரும் இறையருளி யிடும்பெரும்பே ராசிரியப் பட்டம் பெற்றேன்
ஏராரும் **உலகதரு வார்**மதுரைத் தமிழ்ச்சங்கத் தினிதின் ஈந்த
சீராரும் **தாக்ஷிணாத் தியகலா நிதி**யெனும்பேர் சிறந்தோன் **சென்னை**
ஊரார்**பல் கலைக்கழகம்** உதவிய **டாக்டர்**ப்பெயர்பெற் றுயர்ந்தா னன்றே.

எக்காலத் தமிழ்ப்புலவர் சரிதமுமன் கறிந்துரைக்கும் இயல்பு வாய்ந்தோன்
தக்கார்கள் மதிக்கும்வகை யாசிரிய னிடத்தன்பு சான்றோன் தன்பாற்
புக்கார்கள் தமிழறிவிற் சிறியரா யினும்உதவி புரிந்து போற்றும்
மிக்கான்மற் றெவர்செய்த சிறுநன்றி யையுமறவா மேன்மை யோனே.

இந்நாளி லிவன்பெருமை யியம்பவெளி தோஅதனுள் ஏகதேசம்
சொன்னாலும் அவைமுழுதும் உலகம்அறிந் தனவாகும் துலேவேறில்லாத்
தன்னாலும் சொலற்கருஞ்சீர்ச் **சாமிநா தேந்த**னுக்குத் தமிழ்நா டெல்லாம்
எந்நாளும் நன்றிபுரிந் தினிதிருத்த லன்றிமற்றென் றியற்றற் பாற்றே.

பொதியவரை யிருந்துதமிழ் புரந்துதிருந் தகத்தியனே புவியின் மீட்டும்
மதியினுயர் தமிழ்தழைய வந்துதித்தா னெனப்புலவர் வழுத்து மாறு
புதியமுறை யினிற்பலசெந் தமிழ்நூல்கள் ஆய்ந்தச்சிற் பொறித்து நல்கும்
நிதியனைய புலவர்பிரான் **சாமிநாதப் பெரியோன் நேடிது வாழி.**

தென்மொழியாய் வடமொழியாய் நின்றருளும் புல்லாணித் திருமால் பாதம்
இன்மொழியாற் றுதி**நாக நாத**னெனும் **சேதுபதி** யினிது வாழி
பன்மொழிமாந் தரும்பரவ நிலவுலகம் ஒருகுடைக்கீழ்ப் பரிபாலிக்கும்
நன்மொழிசேர் **ஐந்தாம்ஜார்ஜாசர்பிரான் செங்கோல்**எந் நாளும் வாழி.

மதுரைத்தமிழ்ச்சங்கக்கலாசாலையாசிரியர்

ஸ்ரீமத் பண்டித ஹரிஹரையரவர்கள் இயற்றிப் படித்த

வாழ்த்து.

தண்டமிழ்க் கடலின் மூழ்கித் தனிப்பெரு நிதிய மாகும்
பண்டைநூல் கொழித்தெ டுத்துப் பயன்பெறச் செப்ப னிட்டே
யொண்டமி ழுலகிற் கீந்த வுத்தம தானம் வாய்ந்த
திண்டிறற் சாமி நாதன் றிருவளர் மாலே யாமால்.

சொன்னலம் பொருண லங்க டுவன்றிய தமிழா ராய்ந்து
தன்னலங் கருதா தூற்ற தனிப்பெரு மிடர்கள் தாங்கிப்
பன்னுநூ லமுத மீந்த பான்மையிற் சாமி நாதன்
துன்னிய கடுவை யேற்றுச் சுதைசுரார்க் கீந்தோ னுவான்.

கலைவளந் தனக்கே யுள்ள கலைமக ளுறைத லாலும்
நிலையுள மறையோ னென்ன நிகழ்த்திடும் பான்மை யாலும்
உலைவறத் தவஞ்செய் தோர்கட் குண்மைநூ லுரைத்த லாலும்
கலைநிதிச் சாமி நாதக் கலைஞனும் பிரம னுமால்.

சொற்றவிந் நிலைமை யோர்ந்தே துரைத்தனத் தார்க ளீந்த
மற்றைய சிறப்பி னேடு மஹாமஹோ பாத்தி யாய
நற்பெரு விருதும் ஏற்று நாடுபல் கலைச்சங் கத்தார்
பிற்பட வளித்த டாக்டர் எனும்பெரு விருதும் பெற்றேன்.

நாடருங் கலைக ளாய்ந்த நற்றவன் காம கோடி
பீடமார் முனிவ னன்னோன் பெருமைதேர்ந் தன்பி னீந்த
பாடமர் தாக்ஷி ணாத்ய கலாநிதிப் பட்டம் வாய்ந்தோன்
நீடுறு மாயுள் பெற்று நிலவுக புவியின் மாதோ.

வேறு.

பண்புறு மஹாமஹோ பாத்தியா யப்பெருமை
பாரித்த சாமி நாத
அண்ணலுக் கெண்பதாம் ஆண்டுநிறை வுற்றவிவ்
வரியதிரு நாளை யன்பர்
நண்பரொடு கூடியே கொண்டாடு நோக்கமும்
நன்குநிறை வுறுக வன்னோன்
சண்முகக் கட.வுள்போ லென்றுமிளை யானைத்
தமிழ்ச்சுவை யருந்தி வாழி.

ப்ருஹ்மஶ்ரீ மஹாமஹோபாத்தியாய
திராவிடவித்யாபூஷண தாக்ஷிணாத்யகலாநிதி

Dr. உ. வே. சாமிநாதையரவர்கள்பேரிலே

யாழ்ப்பாணத்து ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கமும்,
கலாநிலையமும் இட்ட கட்டளைப்படி
க. சு. நவநீதகிருஷ்ணபாரதியார் இயற்றிய

நாண்மங்கலவாழ்த்து.

பூவிரி சோலைக் காவிரிப் புனலுள்
தோய்ந்துளங் குளிர்ந்து தோன்று குடமுனிப்
பொதியச் செந்தமிழ் மதியச் சந்தனம்
பூசிப் புனைந்து வீசிப் பரந்த
கலைதரு சீர்த்தி கவின வுடுத்து
மதியணி வேணி மாபெருங் கடவுள்
துதியமு துண்டுவருந் தோலா நாவினை;
தமிழ்ப்பா லுண்ணலின் தமிழ்மக வாயினை;
தமிழ்நல னுகர்தலின் தலைவனு மாயினை;
தமிழ்தரு நலத்தால் தாயு மாயினை;
தமிழுட லாகின் நீயுயி ராகுவை;
தமிழுயி ராகின் நீயுட லாகுவை;

தமிழை யாழாக்கித் தமிழ்ப்பா விசைக்குவை;
நினையா ழாக்கித் தமிழுமிசை யெழுப்பும்;
என்புநெக் குருக்குந் *தென்கலைத் திருவினை;
சீரா னுயர் †பெரும் பேரா சிரியனை;
பெரும்புகழ் படைத்து வரும்‡பே ரறிஞனை;
ஆனாப் புலமை மீனாட்சி சுந்தரப்
பாற்சட விருந்து மேற்கலை முகந்து
சொல்லே ருழவ ரெல்லாரு மேத்தித்
தத்தம் புலங்களின் முத்தமிழ்ப் போகமும்
வருந்திமுயல் கிலரா யிருந்துவிளை வெய்த
மடியாக் குணமலை முடிமே லிருந்தே
ஆய்ந்தகரு முதலா வேய்ந்தவை முற்றி
முன்னா மின்னலால் துன்னா மிடியால்
துன்பிலா துலக மின்புற வொளிசெய்
தின்னுரை யியம்பி மன்பதை மகிழ்கொள
நூன்மழை பொழியும் தேன்குரான் முகிலினை;
பொருந்துநின் குருவின் திருந்துவா லாறெனும்
விருந்தமு தூட்டிய பெருந்தமிழ் வள்ளலை;
கடல்புக் கொளித்த புடவிதரு மால்போற்
சிலந்தி வலைக்குட் சிதலுணக் கிடந்து
நலிந்தழிந் தொழிந்த புலந்திகழ் சங்கப்
பனுவற்கு அச்சீந்து பவனிவரச் செய்தனை;
மணிமே கலையணிந்து மானங் காத்துச்
சிலம்பணி யணிந்து சிந்தா மணிமுடிக்
காவிய வுலகெலாங் களிகொளப் புனைந்து
வருங்கவ லகலப் பெருங்கதை யுரைத்துப்
புறமெலாம் புதுக்கித் திறனெலாங் காட்டிப்
பதிற்றுப் பத்தெனு மன்னரும் பரவ
ஐங்குறு நூறு மகங்குழை யன்பரும்
மங்கலப் பாட்டு மனம்பரி பாட
அந்தா திகண்முத லாகிய சுற்றம்
வந்தடி போற்ற வயங்கு நன்னூன்
மங்கலம் புனைந்து மயின்மே லிருத்திப்
புத்தமு தொத்த முத்தமி ழரசிக்குச்
செய்யாச் சிறப்பெலாஞ் செய்துகண் டுவக்குநை;
நான்மறை ஞானத் தேன்மழைத் தாமரைத்
தாரினை; காரினை யெள்ளுந் தமிழ்க்கலைக்

---

* தாக்ஷிணாத்யகலாநிதி. †மஹாமஹோபாத்தியாயர். ‡டாக்டர்.

கொடையினை; ஒள்ளிய நடையினை; வைதிகச்
சைவம் பழுக்குந் தெய்வத் தருவினை;
எமஞ் சான்ற இளந்தமிழ் புரந்துவரு
சேமஞ் சான்ற சாமி நாதனும்
ஒருபெயர் பூண்டமைக் கொப்பத்தமிழ் புரக்குநை;
நன்றுதரு மியற்றமிழ் நவின்றவ ரெல்லாம்
அன்றுதொல் காப்பிய ஞணவழி நின்றதின்
இன்றுநின் ஞணவழி யியங்குமா றியக்கினை;
ஓங்குது மெனத்தமி ழொருவின ராகி
ஆங்கிலம் பயின்ற வறிஞரு நின்னருட்
பாங்கடைந் துய்வான் பணிந்துவரு சிறப்பினை;
காதுள் வெதுப்பினும் தீதுநீ கொளாது
ஓதி யின்னுரை உவக்குநை; இன்றுநீ
ஈண்டேண்ப தாவ தாண்டுநிறைந் தனையெனத்
தாண்டுமலை யுடுத்த தமிழக மெல்லாம்
பெருநா ளாகப் பேணுபு புரியுநின்
திருநாண் மங்கலத் தொருமாண் சிறப்பும்
பூண்டு வேண்டிய வேண்டியாங் கெய்தினை;
ஐய!
நின்னுறு பிறப்பே நிறைதமிழ்ப் பிறப்பே;
நின்னுறு வளர்வே நிகர்தமிழ் வளர்வே;
நின்னுறு பேறே நிலவுதமிழ்ப் பேறே;
நின்னுறு வாழ்வே நெடுந்தமிழ் வாழ்வே;
நினக்குச்செய் தொண்டே நிலைதமிழ்த் தொண்டே;
நீபுரி யருளே நிறைதமி ழருளே;
ஆகலின்,
இருசுட ருலகுக் கொருநீ யாகி
ஒருபே ராற்றலும் போற்றி வருநா
ளுயுளும் வேத வாசியு மடைந்து
நாவா லரனெழுத் தைந்தையு நவின்று
பூவா லவனடிப் போதிணை புனைந்து
செந்தமிழ் வண்மையும் வந்தமை கண்மையும்
மறாது வழங்கி யறாது புரந்து
நின்னல் லாவிநின் மெய்யொடு நிலைஇ
இன்ன லின்றி யின்பெலா மெய்தி
மன்னுக பெரும வழிவழி
ஒன்றுங் கன்னித் தமிழுட னுவந்தே.

எண்பத்தொன்றும் பிறந்தநாள்.

ஊ. சா. வேங்கடராமையர் எழுதியது.

செந்தமிழ் நாட்டில் முந்துபல் லாண்டாய்த்
தோன்றிவா னேக்கு மான்றசீ ரார்ந்த
தண்டமிழ்ப் பயிர்க்கோர் கொண்டல் மானப்
பொன்னிநன் னாட்டில் தன்னிகர் தானும்
புகழ்பெறு முத்தம தான புரத்தில்
தண்டமி ழறிவே இன்னிசைத் தெளிவே
சான்றவ ருறவே சங்கரன் பூசையே
என்பன கைவந் தன்பமர் சரஸ்வதி
அம்மையும் வேங்கட சுப்பிர மணியச்
சீரிய ரும்புரி நேரிய நோன்பின்
பயனு வுதித்த நயமிகு புனிதன்
ஆரியன் செந்தமிழ்ப் பேரிய லாசான்

என்று தமிழுலகம் போற்றிப் புகழும் பெருமை வாய்ந்து சிறந்து விளங்கும் ப்ரும்மஸ்ரீ, மஹாவித்வான், மஹாமஹோபாத்யாய, தாக்ஷிணாத்ய கலாநிதி, த்ராவிட வித்யாபூஷணம், டாக்டர் உ. வே. சாமிநாதையரவர்களுடைய எண்பத்தோன்றும் பிறந்தநாள் நாளிது பவ-ஹு மாசிமாதம் இருபத்துமூன்றும் உ (6—3—1935) புதன் கிழமை தமிழ்நாட்டினரால் பல இடங்களிலும் மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பெற்றது. இந்த நன்முயற்சியிலே முன்னின்று தொண்டியற்றிய பலருக்கும் முதற்கண் எனது நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நமது நாடு புராதனப்பெருமைவாய்ந்தது; தடுக்கமுடியாத பல்வேறு காரணங்களால் அப்பெருமையை யிழந்துநிற்பது. இங்ஙனம் பெருமையிழந்து வீழ்ச்சியுற்ற நாட்டினர்க்கு வாழ்ச்சி பெறத் துணைபுரிவன அந்நாட்டுப் புராதனநூல்களே. அந்த நூல்களே அவர்கள் கைக்கொள்ளவேண்டிய குறிக்கோள் இவை என்பதைத் தெளிவுறத் தெரிவிப்பன. "காலான முதற்பூமி கைவந்தால் முத்தியும் கைவந்ததாம்" என்பர். அங்ஙனமே "மனைக்குள் வைத்த பண்டங்களை மறந்தவன் வருடநூ றழுதாலும்—நினைத்துணர்ந்தபின் னன்றிக் கிட்டா" என்பர். இந்த இலக்கணங்களுக்குப் பொருந்த நமதுநாட்டினர் தாங்கள் மறந்திழந்த

தங்கள் பெருமைகளைப் பண்டைநூல்கள்காட்டும் குறிநெறிகளின் துணைக் கொண்டே பெற்று இன்புறுதல்வேண்டும்.

இம்முறையில் நம்மவர்க்குத் துணைசெய்யும் நூல்கள் பல. அவற்றுள் பெரும்பாலானவற்றை இறந்தொழிந்துபோகாமல் காத்துப் பதித்துத்தருதல் எளியதொரு காரியமன்று; அருமையினும் அருமையானசெயலே. இத்துணை அரியசெயலைச் செய்தவர்களும், செய்பவர்களும் மிகச்சிலரே. இத்தகைய பெருமைக்குரிய செயற்கரும் செயலினைச்செய்து தலைசிறந்துவிளங்குகின்ற பெரியார்களுக்கு நாம் செய்யவேண்டிய கைம்மாறு பலதிறப்படும்.

"எந்நன்றி கொன்ருர்க்கு முய்வுண்டாம் உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு"

என்பர் திருவள்ளுவர். நன்றியறிதலை மிகச்சிறந்த அறச்செயலாகக் கொண்டொழுகும் இயல்புவாய்ந்த தமிழ்நாட்டினர் இக்கட்டுரைத்தலைவராகிய ஸ்ரீமத் ஐயரவர்கள்பால் பெரிதும் கடமைப்பட்டுள்ளார்கள். ஐயரவர்கள் உடல், பொருள், காலம் ஆதியவற்றைப் பொருட்படுத்தாது தண்டமிழ்த்தாய்க்குச் செய்து வரும் தொண்டுகள் மிகப் பல. அவற்றை—

'சிந்தா மணியே நந்தா தறங்கூர்
மணிமே கலையே மன்னுஞ் சிலப்பதி
காரமே பத்துப் பாட்டே வெண்பா
மாலையே புறநா னூறே ஐங்குறு
நூறே பதிற்றுப் பத்தே துதிசேர்
பரிபா டல்லே பாரோர் வியக்கும்
பற்பல செய்தியைக் கற்பனை யுடனே
தந்துவப் பிக்கும் கொங்குவேள் கதையே
திருவிளை யாடலே அரியநன் னூலே
தாழிசை மணக்குந் தக்க யாகப்
பரணியே வொப்பிலாப் பாவலர் மணியாம்
தேசிக னூற்ருெகைத் திரளே தேசிகர்
திரட்டே பலபல சிறுகாப் பியமே
பற்பல வுரையே திப்பிய சரிதமே'

என்று ஓராற்ருன் நன்று தொகுத்துக் கூறுமாறு அமைந்து கிடக்கின்ற, அவர்கள் அரிதின் ஆராய்ந்து அச்சியற்றி வெளி

யிட்ட நூல்களின்பெயர்களைக் குறிக்குமுகத்தால் வெளிப்படுத்த லாம். "தொல்பலநூல் ஆய்ந்துசிவந்த" நெஞ்சினராகிய ஐயரவர்கள் செய்துவரும் திருத்தொண்டு இவ்வளவேயோ! அவ் வப்பொழுது பத்திரிகைகளில் வெளியிடும் கட்டுரைகளையும் கழ கங்களில் இயற்றிவரும் விரிவுரைகளையும் சேர்த்துக்கொள்வதும் கடமையை உணர்ந்த செய்கையாகும்.

இவ்வாறு மாரிபோற் கைம்மாறுகருதாதுசெய்துவரும் ஐயரவர்களிடமிருந்து இன்னும் பல பயன்களையும் பெற்று இன் புறவேண்டித் தமிழ்மக்கள் செய்யவேண்டியன சில. அவற்றுள் தலையாயது அவர்கள் வெளியிடும் நூல்களைப் பத்தாயிரக்கணக் கில் வாங்கிப் பல்லிடத்தாரும் படித்துப் பயன்பெறுவது. மற் றொன்று அவர்கள் செய்துவரும் திருத்தொண்டைப் பலரறியப் புகழ்ந்துபேசுவது.

இவ் விருகடமைகளையும் நிறைவேற்றிக் கொள்ளத்தக்க நல்ல சமயம் இப்பொழுது கிடைத்துள்ளது.

"ஒல்லும் வகையா னறவினை யோவாதே
செல்லும்வா யெல்லாம் செயல்"

என்ப. ஆதலின் அந்த நல்லசமயத்தைக் கைநழுவவிடாமல் ஒவ் வொரு தமிழ்மகனும் தன் தன் இயல்புக்குத்தக்கவகையில் ஒழு கிக் கடமையை நிறைவேற்றிக்கொள்வது விரும்பத்தக்கதாம்.

நந்தமிழ் வாழி சாமி நாதவா சிரியன் வாழி
சுந்தர மாக வன்னோன் தொகுத்துமுத் திரித்துத் தூய்தாத்
தந்தபன் னூல்கள் வாழி தக்கபொன் னளித்தோர் வாழி
சந்தத மவற்றைக் கற்போர் தாரணியில் வாழி வாழி.

இந்த நிலப்பரப்பி லென்று முளதாகும்
செந்தமிழ் வாழ்க திகழ்செந் தமிழ்ப்பணிக்கே
முந்தருளு வோன்சாமி நாதன் முருகருளால்
சந்ததமும் வாழ்க தழைத்து.

ஸ்ரீ:

பரிசோதனத் தொடர்.

(சொல்-இளம்பூரணம்.)

௧0௨--ஆம் பக்கத்தொடர்ச்சி.

பரிசோதனம் 26. (வினையியல் 46; "வாராக் காலத்து வினைச்சொற் கிளவி, யிறப்பினு நிகழ்வினுஞ் சிறப்பத் தோன்று, மியற்கையுந் தெளி வுங் கிளக்குங் காலை" என்பது சூத்திரம். இது காலவழுக்காத்தல் நுதலிற்று. "எதிர்காலத்துச் செயற்கைச்சொல், அஃது இறந்த காலத்தையும் நிகழ்காலத்தையுங்கொள்ளும், இயற்கைக்கண்ணும் தெளி வின்கண்ணும், சொல்லுமிடத்து" என்பது இதற்கு இளம்பூரணர் எழு திய உரை.

இதனுள் 'எதிர்காலத்துச் செயற்கைச்சொல்' என்றாராயினும் எதிர்கால வினைச்சொல்லான் உணர்த்தற்குரிய செயல் என்பது கருத் தாகக்கொள்ளவேண்டும். அஃது இயற்கைக்கண்ணும் தெளிவின் கண்ணும் இறந்தகாலத்தையும் நிகழ்காலத்தையும் கொள்ளுமென இயையும். இயையவே, இயல்பும் தெளிவும்பற்றிய ஒருசார் எதிர்கால வினையினை இறந்தகாலச்சொல்லானும் நிகழ்காலச்சொல்லானும் கூறக் குற்றமின்றென்றதாயிற்று.

இவ்வழுவமைதி இரண்டனுள் இயற்கைக்குதாரணம் 'இக்காட்டுட் போகிற் கூறைகோட்பட்டான், கூறைகோட்படும்' என வரும். தெளி வுக்குதாரணம் 'எறும்பு முட்டைகொண்டு தெற்றியேறின் மழைபெய் தது, பெய்யும்' என வரும். இவ்வுதாரணங்களில் முன்னையது அச்சுப் புத்தகத்தில் 'இக்காடுபோகிற் கூறைகோட்பட்டான்' எனவும், பழஞ் சுவடியில் 'இக்காட்டுட்போகிற் கூறைகோட்பட்டான்' எனவும் பிரதி வேறுபாட்டுடன் காணப்படுகிறது. இது நிற்க.

இச்சூத்திரத்து இயற்கையென்றும் தெளிவென்றும் கூறப்பட்டன யாவை? என்பது கடா. இதற்கு விடை, ஒருபொருளின் தன்மை முதலாயினபற்றி அறியப்படுவது இயற்கை; நூன்முடிபானும் பிற வாற்றானும் துணியப்படுவது தெளிவு: என்பதாம். இங்ஙனமாயினும்

இவை இன்னவென விளக்கும் பகுதி இளம்பூரணருரையிற் சிறிது பழுதுபட்டுள்ளது.

"இயற்கை என்பது அதன்மேற்றீமை; தெளிவு என்பது ஒரு நூன்முடிபானும் பிறிதானுங் கண்டு தெளிதல்:" என்ற அவருரையின் முன்வாக்கியம் பொருளொடு பொருந்தாமை நன்குவெளிப்படும். அச்சுப் பிரதியிற்போலவே பழம்பிரதியினும் ஈண்டு வழுவுண்மையால் இஃது உய்த்துணர்வானே களைதற்குரியது.

இயற்கையென்பது ஒருபொருளின் நன்மை தீமை இரண்டற்கும் பொதுவாய வழக்கு. ஆகலின் அவற்றுள் ஒன்றனை வேறுபிரித்து அதன் பொருளாகக் கூறல் அமையாது. ஆசிரியர் தொல்காப்பியர் இங்குத் தீமையையே கருதினரெனின், அஃது இனிதுவிளங்கத் 'தீமை யுந் தெளிவும்' எனச் சூத்திரஞ்செய்திருப்பர். அங்ஙனமல்லாமல் அவர் 'இயற்கையுந் தெளிவும்' என்றமையால் ஒன்றன் தீமையும் நன்மையு மாய இருவகையியல்புமே அவர்க்குக் கருத்தாகவேண்டும்.

இவையேயன்றி உரையாசிரியரும் ஒருபொருளின் தீமையை 'அதன்றீமை' என ஒருவாறு சுட்டுவதல்லது 'அதன்மேற்றீமை' என இடனன்றிப் பிறசொல்லை இடைப்பெய்து தவறிழையாரென்பது திண்ணம். ஆகையால் 'இயற்கையென்பது அதன்மேற்றீமை' என்றபோலி யுரையின் உண்மைவடிவம் யாதாயிருக்குமென ஆராயத்தக்கது.

ஆராயுங்கால், இயற்கை என்பது 'அதன் பெற்றிமை' என ஆதி யில் இளம்பூரணர் எழுதியிருந்த வாக்கியம் இங்ஙனம் உருமாற்றம் எய்திற்றேவென ஐயுறக்கிடக்கின்றது. இங்கு 'அதன்' என்றது உரைப்பாரும் உணர்வாரும் உளங்கொண்ட யாதானுமொருபொருளைச் சுட்டிற்றெனல் கூடுமாகலின், அஃது அத்துணைக் குற்றமுடையதன்று. ஒன்றன் இயல்புகுறிக்கும் 'பெற்றி' என்னுஞ் சொல் 'மை'விகுதிபெற் றும் வழங்குமாகலின், அஃது 'இயற்கை' என்பதற்கு ஏற்ற பொரு ளாக அமைகின்றது. ஆகையால் 'பெற்றிமை' என்பதே பெரும்பாலும் எழுத்துருவொற்றுமையான் 'மேற்றீமை' என வழுப்பட்டதுபோலும்.

இளம்பூரணர்க்குப்பின் உரையிட்ட சேனாவரையரும் "இயற்கை யென்பது பெற்றிமுதலாயினவற்றான் உணரப்படுவது; தெளிவு நூற்

றெளிவான்வருவது" என்று இங்ஙனமே வரைந்தனர். முன்னுரையாளர் மொழியையும் பொன்னெனப் போற்றுமுறைகொண்டே இதனுட் பெற்றியென்னுஞ்சொல் ஆளப்பெற்றதென்பது உய்த்துணர்வார்க்கு நன்குபுலப்படும். ஆகவே, இதுவும் மேற்போந்தகொள்கையை வலியுறுத்தும் சான்றாகின்றது.

இனி, இயற்கைபற்றிய காலவழுவமைதிக்கு உரையிற்காட்டிய உதாரணம் கூறைகோட்படுதலாகிய தீமைப்பயன் குறிப்பதால் 'அதன் மேற்றீமை' என்ற பாடம் ஒருவாறு பொருந்துமோ என ஐயுறல் வேண்டா. ஏனெனில் காட்டுட்போகிற் கூறைகோட்படுதலியல்பு என அதன் பெற்றியையே அவ்வுதாரணம் உணர்த்திற்றல்லது பிறிதில்லை. இத்தீமைப்பயன்போல வேறு நன்மைப்பயனை இயல்பாகவுடையதும் இவ்விடத்து ஏற்ற உதாரணமாகலாம். அது வழக்குநோக்கி வந்தவழிக் கொள்ளற்பாற்று.

உரையிற்காட்டிய உதாரணம் இங்ஙனம் ஒருதலையாய தீயவியல்பே குறிப்பது, முன்னர் உருவொற்றுமையின் மயங்கின எழுத்தாளரைப் பின்னரும் பேதுறவுசெய்து, அவர் பிழைப்பாடக்கீட்டுதற்குக் காரணமாயிற்றுப்போலும்!

இதுகாறுங் கூறியவற்றான், அச்சுப்பதிப்பில் 'அதன் மேற்றீமை' என்றிருப்பதை 'அதன் பெற்றிமை' எனத் திருத்திக்கொள்ளல் நலமென்பது முடிந்தது.

பரிசோதனம் 27. (இடையியல் 1.) "இடையெனப் படுப பெயரொடும் வினையொடும், நடைபெற் றியலுந் தமக்கில் பிலவே" என்பது சூத்திரம். இதன்பொருள், இடைச்சொற்கள் பெயர்ச்சொல்லோடும் வினைச்சொல்லோடும் நடைபெறும்; தனித்தியங்கும் ஆற்றலில என்பதாம்.

இப்பொருளை உதாரணமுகத்தான் விளக்கப்புகுந்த இளம்பூரணருரை, இடைச்சொல் பெயரோடு நடைபெற்றதற்குமட்டும் ஒருவாறு காட்டிப் பின் அது வினைச்சொல்லோடும் அங்ஙனம் நடைபெற்றதற்குக் காட்டாது நின்றுவிட்டது. அச்சுப்பதிப்பினும் பழம்பிரதியினும் ஒருபடியாக இக்குறைபாடு காணப்படினும், ஆதியில் உரையாசிரியர்

அதற்கும் ஒரு வரலாறு காட்டியிருந்து, பின்னர் அது விழுந்திருக்க வேண்டுமென்று துணியத்தக்கது. சேனாவரையர் காட்டியவாறு 'வருகதில்' என்பதுபோல்வது இங்கு எடுத்துக்காட்டாகலாம்.

'ஆகவே அச்சுப்புத்தகத்தில், 'அதுமன் என்பது பெயரொடு நடைபெற்றது' என்றுள்ள வாக்கியத்தின்பின் "வருகதில் என்பது வினையோடு நடைபெற்றது" என்றாற்போன்றதொரு வாக்கியத்தையும் புகுத்து எழுதிக்கொள்ளல்வேண்டும். அதனால் அவ்வுரையின் குறைப் பொருள் நிறைவுற்று விளங்கும்.

இனி இதனை அடுத்துள்ள விசேடவுரைப்பத்தியில், "தமக்கியல் பிலவே என்றதனான் இடைச்சொற்கள் பகவின்றியே நின்றிசைப்பன வும் உள என்றவாறு; வரலாறு; உண்டான் எனனுந் தொடக்கத்தன:" என்றது சூத்திரத்தில் பெயரொடும் வினையொடும் நடைபெற்றியலும் என்றாலும் கருதியபொருள்பயக்கும்; தமக்கியல்பில என்றல் மிகை; அதனால் இடைச்சொற்கள் அங்ஙனம் நடைபெறுங்கால் அவற்றொடு பக்குநின்றிசைப்பனவும் பகவின்றியிசைப்பனவும் என இருவகைய; அவற்றுள் முன்னர்க்காட்டியன பக்குநின்றன; இனிப் பகவின்றிநின் றன, உண்டான் என்னுந் தொடக்கத்து வினைக்கிடையே அவற்றி னுறுப்பாயிணைந்த இடைச்சொற்களாம்: என்றவாறு.

எனவே, 'அதுமன்' என்பதில் இடைச்சொல் பக்குநின்று பெய ரொடு நடைபெற்றாற்போல அஃது அங்ஙனம் வினையொடு நடைபெற்ற தற்கு மேற்காட்டியவாறு 'வருகதில்' என்பதுபோன்ற உதாரணம் இன்றியமையாதாம். 'தமக்கியல்பிலவே' என்ற மிகையினாற் கொள்ளப் பட்டு, இங்கு உண்டான் என்றற்றொடக்கத்து வினைச்சொல்லின் அகத் துறுப்பாய்ப் பகவின்றி நடைபெற்ற இடைச்சொற்கள் அவ்விடத்திற் குரிய எடுத்துக்காட்டாகமாட்டா.

[தொடரும்.]

T. N. அப்பனையங்கார்,
தலைமைத்தமிழாசிரியர்,
இராமேசுவரதேவஸ்தானம் பாடசாலை, மதுரை.

கம்பராமாயண இன்கவித்திரட்டு.

[௧௧௮-ஆம் பக்கத் தொடர்ச்சி.]

77. 'பிறர்மனை எய்திய பெண்ணைப் பேணுதல்
திறனல தென்றுயிர்க் கிறைவன் தீர்ந்தனன்.
புறன்அலர் அவன்உறப் போது போக்கி, யான்
அறனல தியற்றினேன்: என்கொண் டாற்றுகேன்?'

இ-ள். 'அன்னியன்வீட்டையடைந்த பெண்ணை (த் திரும்ப வீட்டுக்குக் கொண்டுவந்து) ஆதரித்தல் தகாததென்று என் பிராண நாயகன் (என்னை மீட்குதலை) விட்டுவிட்டான். (அப்படி அவன் விட்ட பின்பு, 'அவன்மனைவி அயலான்மனையிலிருக்கின்ருள்' ளென்று) பக்கத்துள்ளார் (தூற்றும்) பழிச்சொல்லை அவன் அடையாநிற்க, (யான் இறந்து அப் பழிச்சொல்லுக்கு ஆதாரமில்லாததாகச்செய்யாமல், எனக்கு நன்மையின்றி அவனுக்குத் தீங்குசெய்கின்றவளாய் அவப்) பொழுதுபோக்கி (அயல்மனைவாழ்க்கையாகிய) அதர்மத்தைச்செய்து கொண்டிருந்தேன். (யான் உயிர்விடுதலன்றி வேறு) எதனுல் (அவன் பழியடைதலை) நீக்குவேன்? (அவன் பழியடைதல் நீங்கச் சாவேனுக என்றவாறு.)'

பேணுதல் - பாதுகாத்தல். திறன் - திறம் (என்பதன் போலி) - தகுதி. உயிர்க்கு இறைவன் - பிராணநாயகன் - கணவன். தீர்தல் - விடுதல்; நீங்குதல். புறன் - பக்கம், பக்கத்துள்ளாரை யுணர்த்தியது. அறன் - அறம் (என்பதன் போலி) - தருமம். அறன் அலது - தருமம் அல்லாதது - அதர்மம். என் - எது. ஆற்றுதல் - தணித்தல்; நீக்கல். 'அறனலதியற்றிவே' றென்பதும் பாடம்.

78. 'எப்பொழு திப்பெரும் பழியின் எய்தினேன்,
அப்பொழு தேஉயிர் துறக்கும் ஆணையேன்.
ஒப்பரும் பெருமறு உலகம் ஓதயான்
துப்பழிந் துய்வது துறக்கம் துன்னவோ?'

இ-ள். 'எப்பொழுது (பிறன்மனைவாழும்) பெரும்பழியை அடைந்தேனோ, அப்பொழுதே உயிரைவிடவேண்டிய கடமையுடையேனானேன். உலகத்தார் (என்னைக் குறித்துக்) குற்றங்கூறநிற்க, நான் மரியாதைகெட்டு உயிர்வாழ்தல், நற்கதியடைதற்கோ? (நரகம் அடைதற்கேயாம்.)'

ஆணை - ஆன்றோர்மரபு; கடமை; நியதி; மரியாதை. மரியாதையற்றவனைத் 'துப்புக்கெட்டவன்' என்பது உலகவழக்கு. உய்தல் - உயிர் வாழ்தல். துறக்கம் - சுவர்க்கம். துன்னுதல் - அடைதல்.

79. 'அன்பழி சிந்தையர் ஆய ஆடவர்
வன்பழி சுமக்கினும் சுமக்க, மற்றுயான்
துன்பழி பெரும்புகழ்க் குலத்துள் தோன்றினேன்;
என்பழி துடைப்பவர் என்னின் யாவரே?'

இ-ள். '(யான் புகுந்த குடியினரான) இராமலக்ஷுமணர் (அவர்களது க்ஷத்திரியகுலப்பெருமை கெட, அவர்கள் வீட்டுக்கு வந்த பெண்ணைக் கவர்ந்தவனைக் கொன்று அவளை மீட்காத) கொடும்பழியை ஏற்றுக்கொண்டாலும் கொள்ளட்டும். (அது, அவர்கள் காரியம்; அதற்கு நான் பொறுப்பாளியன்று.) மிக்ககீர்த்தியையுடைய (சனக மகாராசனது) குலத்திலே தோன்றிய யான், என் (பிறந்தகுலத்தைப் பெருமைகெடப் பிறன்மனைவாழும்) பழியை (ஒழிக்கும் கடமையுடையேன். அப் பழியை) யானல்லாமல் யாவர் நீக்குவார்? (இராமலக்குமணர் என்னைச் சிறைமீட்டாலும், அப்பழியொழியாது. அது யான் செத்தால்தான் ஒழியும். ஆதலால் சாதலே தக்கது.)'

அன்பழி சிந்தையர் - அன்பற்ற நெஞ்சினர், இராமலக்குமணர் தன்னைச் சிறைமீட்காமையால் கோபத்தால் தன்பக்கல் 'அன்பழி சிந்தையர்' என்றாள். துன்பு அழி - (துன்ப காரணங்களை விலக்கியதனால்) துன்பம் நாசமான - துன்பத்தை யறியாத. துடைத்தல் - நீக்குதல். 'சுமக்க வாலியர்' என்பதும் பாடம்.

80. 'வஞ்சனை மானின்பின் மன்னைப் போக்கி,என்
மஞ்சனை வைது,பின் வழிக்கொள் வாயென
நஞ்சனை யான்அகம் புகுந்த நங்கையான்,
உய்ஞ்சனென் இருத்தலும் உலகம் கொள்ளுமோ?'

இ-ள். 'கபடமுடைய (மாரீசனுன மாய) மான்பின்னே என் நாயகனைப் போகச்செய்து, என் பிள்ளைபோன்ற (என் அன்புக்குப்பாத்திரமான) இலக்குமணனைக் கடுஞ்சொற் கூறி (என் நாயகனை)ப் பின்பற்றிப் போவாயாக (என்று சொல்லி அனுப்பி என்னைக் காப்பவரை அகற்றி யானே எனக்குச் செய்த தீங்கினால்) நஞ்சுபோலும் கொடியான் (ஆன இராவணனாற் கவரப்பட்டு அவன்) வீட்டுக்குவந்த பெண்ணாகிய நான் (செத்தொழியாது) உயிர்வாழ்தலை உலகத்தார் (இழிவாகக்கருதுவாரே யன்றி) ஏற்றுக்கொள்வார்களோ? (கொள்ளார். ஆதலால் நான் உயிர் விடக்கடவேன்.)'

மன் - கணவன் (தமிழகராதி). மஞ்சன், மைந்தன் (-மகன்) என்பதன் போலி. நங்கை - பெண்ணிற்சிறந்தாள்; இங்கே பெண்ணிற் கடைப்பட்டாளென்ற எதிரிடைப்பொருள் பயந்து இகழ்ச்சிகுறித்தது. உய்ஞ்சனென், உய்ந்தனென் (-பிழைத்திருந்தேன்) என்பதன் போலி. 'கொள்ளுமோ,' ஏற்றுக்கொள்ளுமோ? ஒப்புக்கொள்ளுமோ? பொறுத்துக்கொள்ளுமோ? என விரித்துக்கூறிப் பொருள்கொள்ள நின்றது.

81. 'வருந்தல்இல் மானமா அனைய மாட்சியார்
பெருந்தவ மடந்தையர் முன்பு, பேதையேன்
"கருந்தனி முகிலினைப் பிரிந்து கள்வர்ஊர்
இருந்தவள் இவள்"என ஏச நிற்பனோ?'

இ-ள். '(தன் திரண்ட மயிர்க்கற்றையில் ஒரு மயிர்போனாலும் உயிரைவிடுகின்ற) கவரிமான்போன்ற (உத்தம மானமுடைய) வரும் (குற்றம் நேர்ந்தால், இறத்தலன்றி உயிரோடிருந்து) வருந்துதலில் லாதவரும் (வேறேயும் சிறந்த) மேம்பாடுடையவருமான (கற்புப்) பெருந்தவம் படைத்த (அயோத்திமாநகர) மாதர்முன்னே, அறிவிலியான நான் (சிறைமீட்கப்பெற்றுச் சென்றேனானால், அவர்கள், என்னைச் சுட்டி) "ஒப்பற்ற காளமேகம்போன்ற இராமபிரானைப் பிரிந்து கள்ள அரக்கரூரிலே வாழ்ந்தவள் இவள்" என்று (தங்களுள்ளே பேசி என்னை ஏசுவார்களே. அவ்வாறு அவர்கள்) ஏச(க் கேட்டபோது இறந்துவிடுவேனேயன்றி, உயிர்தாங்கி) நிற்பேனோ! (அப்போது சாதலினும் இப்போது சாதல் நன்று.)'

மானமா - கவரிமான். 'மயிர்நீப்பின் வாழாக் கவரிமா அன்னார் - உயிர்நீப்பர் மானம் வரின்' என்ற குறட்கருத்து இங்கே யெடுத்தாளப் பட்டது. மாட்சி - பெருமை - மேன்மை. பேதை - அறிவிலி. தனி - ஒப்பற்ற. முகில் - மேகம்.

தன்னைக் காக்கும் இராமலக்குமணரைத் தன்னைவிட்டுப் பிரியச் செய்து காப்பிழந்து கவரப்பட்டுச் சிறைப்பட்டதுகருதித் தன்னைப் 'பேதையேன்' என்றாள்.

82. 'அற்புதன் அரக்கர்தம் வருக்கம் ஆசற
விற்பணி கொண்டரும் சிறையின் மீட்டநாள்,
"இற்புகத் தக்கலை" என்னின், யான்உடைக்
கற்பினை எப்பரி சிழைத்துக் காட்டுகேன்?'

இ-ள். '(இங்கேயே சாகநேருவதை யெண்ணிப்பாராமல், அயோத்திக்குப்போனபோது சாகநேருமென்றேன்.) அதிசய (வீர)ன் (ஆன என் நாயகன் இங்கேவந்து) இராக்கதவமிசம் சிறிதுமில்லாமல் (அடியோடு) அற்றுப்போம்படி வில்லின்தொழிலை மேற்கொண்டு, மீட்டற்கரிய சிறையினின்று என்னை மீட்டபோது, "என் வீட்டுக்குள்ளே புகுதற்குத் தகுதியுடையையல்லை" என்றால் என்னுடைய கற்புடைமையை எவ்வாறு (நிரூபணஞ்) செய்து காட்டுவேன்? (காட்டுமாறு இல்லையாதலால், அப்போது விடக்கடவதாகிய உயிரை இப்போது விட்டுவிடுதல் நல்லது)'

வருக்கம் - வமிசம். ஆசு - அற்பம். விற்பணி - விற்றொழில். எப் பரிசு - எவ்விதம். இழைத்தல் - செய்தல். 'இழைத்தல்' என்பது, இங்கே, நிற்கும் இடத்தின் ஆற்றலால், நிரூபணஞ்செய்த லென்ற பொருள்கொள்ள நின்றது. நிரூபணஞ்செய்தல் - உருசுப்படுத்தல் - மெய்ப்பித்தல்.

சீதை தற்கொலைசெய்யப்புக்க இடத்தில் 'ராமதூதன்'
என்று சொல்லித் தொழுது அனுமான் தோன்றல்.

[சீதாதேவி இவ்வாறு புலம்பிச் சாகமுடிவுசெய்து, இதுவே இறத்தற்கேற்ற இடமென்று ஒரு குருக்கத்திமரச்செறிவை அடைந்தாள். (அவள் புலம்பியதைக் கேட்டுக்கொண்டிருந்த) அனுமான் அவள்கருத்தை ஊகித்துணர்ந்து அவள் தற்கொலைசெய்யத்தொடங்கி யிட்டால், தொட்டுத் தடுக்கவேண்டிவருமென்று அஞ்சித் தற்கொலை

தொடங்குமுன்னேயே தடுத்தற்கு உபாயம், தான் ராமதூதனெனத் தெரிவித்தலேயென்று கருதி 'அடியேன் ராமதூதன்' என்றுசொல்லிக் கும்பிட்டுக்கொண்டு அவளெதிரேபோய்நின்றான்.]

ஆராய்ச்சிக்குறிப்பு.

(இங்கே, சற்றுநின்று, கம்பர் இந்தச் சுந்தரகாண்டத்தில், இது வரை, நாம் ஊகித்துணரும்படி, குறிப்பித்திருப்பவை எவையெவை என ஆராய்தல், தகுதியாயிருக்கின்றது:—

ஊர்தேடுபடலத்தில், அநுமான் சீதையைத் தேடும்போது, இராவணனைத் தம் உயிருக்குயிராகக்கொண்ட அவனுடைய பலசாதி மனைவிமார் அவன் தம்பால் வருதற்கு அளவற்ற விருப்புடனிருக்க, அவன் அவர்களோ டிணங்கி அவர்களையும் தன்னையும் களிப்புறச்செய்யும் அறநெறியகன்று மறநெறிபுகுந்து தன்னைத் துரும்பென மதித்த பிறன்மனைவியை விரும்பும் பெரும்பேதைமையை அநுமான் கண்கூடாகக் காண்பதையும், - காட்சிப்படலத்தில், கல்லிடுக்கில் முளைத்து மழைத்துளிகண்டறியாத * அருமந்த சஞ்சீவி † மூலி போல வாடி, 'மென்மருங்குல்போல் வேறுள அங்கமும் மெலிந்து,' இராமனைப் பிரிந்ததை நினைந்து வருந்தி, அவனோடு கூடிவாழ்ந்த காலத்து நிகழ்ந்தவைகளையெல்லாம் நினைந்து, நெடிது பிரலாபித்து அத்தியந்த துக்கத்தையடைந்து கொடும்புலிக்கூட்டத்தின் நடுவே யகப்பட்ட மான்போலக் கரிய பெரிய விகாரவடிவமும் கடிய கொடிய கோரகிரியையு முடைய இராட்சசிகளிடையேயுள்ள சீதையைக் கறுத்த மேகபடலத்தைக் கிழித்து வெளிப்படும் மின்னைப்போல அநுமான் கண்ட தற்சமயத்தில் இராவணன் வருதலையும், - நிந்தனைப் படலத்தில், அவன் பலவாறு நயமொழி புகன்றும் பயமொழி பகர்ந்தும் அவளை இணங்கும்படி வேண்ட, அவள் வெறுத்து மறுக்க, அவன் கொடுங்கோபங்கொண்டு 'இணங்காயேல் இறப்பாய்' என அவளையும் 'இணக்கீரேல் இறப்பீர்' என அவளைக் காக்கும் அரக்கியரையும் பயமுறுத்திவிட்டுப் புறப்பட்டுப்போதலையும், - இந்த உருக்காட்டுபடலத்தில், முன்னமே உயிர்விடுமெண்ணம் உதிக்குமளவுக்கு ஒருபடியே குறைந்த உச்சத்துன்பத்தை உற்றிருந்த சீதைக்கு, இராவணனும் அவனுக்குப் பின்பு இராட்சசிகளும் உறுத்திய வருத்தத்தினால் உயிரை விடுமெண்ணம் உண்டாயிருந்தசமயத்தில் அநுமானது மந்திரத்தி

*அருமருந்தன்ன. †மூலி - மூலிகை - செடி.

ஞல் அரக்கியர் உறக்கமுற, அவள் கண்டு, சாகச் சமயம்வாய்த்ததை அறிந்து, இருத்தலினும் இறத்தலே நன்றென்று, அவன்காதுகேட்கப் பலபடப் புலம்பி அவன் கண்காணச் சாகப்போவதையும் கம்பர் இனிது புனைந்துரைத்திருப்பது, — இரவில் நெடுநேரம் இலங்கைமாநகரமெங்கும் *இலைப்புரைகிளைத்துப்பார்த்துச் சடைந்து இறுதியில் அசோகவனத்தை அடைந்து சீதையைக் கண்ட அனுமான் சிறிது நேரம் தாழ்த்து அங்கே வந்திருப்பானுனல், ஆங்கு நிகழ்ந்த அதிமுக்கியமான செய்திகளைத் தெரிந்திருக்கமாட்டான், அச் செய்திகளின் இயற்கைமுடிவும் அத்தியந்த முக்கியமுமான சீதை தற்கொலையைத் தடுத்திருக்கவுமாட்டானென்ற எண்ணத்தை நம் மனத்துள் எழுப்பி, அனுமான் நேராகக் கண்ணுலும் காதாலும் தெரிந்துகொள்ளும்படி முன்னமே சித்தஞ்செய்து வைக்கப்பட்ட நனியினிய நாடகக்காட்சிகளை நாம் மனக்கண்கொண்டுகாண நடித்துக்காட்டுவதுபோன்றிருக்கின்றது.)

இராமன் வராமை எதனலெனல்.

83. 'ஈண்டுநீ இருந்ததை இடரின் வைகுறும்
ஆண்டகை அறிந்திலன்; அதற்குக் காரணம்
வேண்டுமே: அரக்கர்தம் வருக்கம் வேரொடும்
மாண்டில. ஈதலால், மற்றும் வேண்டுமோ?'

இ-ள். 'நீ இங்கே யிருப்பதை இராமன் அறிந்தானில்லை. (எதற்கும் காரணம் வேண்டியிருப்பதுபோல) அதற்குக் காரணம் வேண்டுமன்றே. (அது நீ அறிந்ததே. ஆயினும் கூறுகின்றேன். அக்காரணம்,) அரக்க வமிசங்கள் (அனைத்தும்) அடியோடும் அழியவில்லையென்பதே. (இதுவே போதிய காரணம்.) வேறேயும் (காரணம்) வேண்டுமோ?' (வேண்டியதில்லையென்றபடி)

ஈண்டு - இங்கே. இடர் - (சீதையைப்பிரிந்த) துன்பம். வைகுதல் - தங்குதல். ஆண்டகை - ஆண்தகை - ஆண்தன்மை - ஆண்மை - வீரம்: வீரமுடையானுன இராமனைக்குறித்தது. மற்றும் - வேறு (காரணமு)ம். 'காரணம் வேண்டுமோ', 'ஈதலால் மாறு வேறுண்டோ' என்பனவும் பாடங்கள்.

சீதை இலங்கையிலிருப்பதை இராமன் அறிதலாகிய காரணத்துக்கும் அவன் அரக்கரனைவரையும் அழித்தலாகிய காரியத்துக்கும்

---

*நுட்பமாகத் தேடி.

இடையே யுள்ள காலம் மிகவும் குறைவானதாமென்பதை உறுதியாக உணர்த்தற்கு அந்தக் காரணகாரியங்களை முன்பின்னாக மாற்றி வியப்பும் நயப்பும் விளையக் கூறினான். இது, காளிதாசமகாகவி சாகுந்தல நாடகத்தில் ஒரு சந்தர்ப்பத்தில் காரணம் காரியத்துக்குப் பிந்தியதாகச் சமத்காரமாகக்கூறியதை நினைப்பூட்டுகின்றது. அது வருமாறு:—

'துஷ்யந்தன் (மாரீசமுனிவனைநோக்கிக் கூறுவது), "பெருமானே! முதலிற் குறித்தது நிறைவேறியதும், பிறகு தங்கள் தரிசனமும் கிடைத்தமையால் தங்கள் அனுக்கிரகம் ஒப்பில்லாததாயிருக்கின்றது. என்னை? முதலில் மலர் தோன்றுகின்றது, அதன்பின் கனி உண்டாகின்றது; முதலில் கார் எழுகின்றது, அதன்பின் மழைபொழிகின்றது. இது தான் காரண காரிய முறை. மற்று இங்கோ, தங்கள் அனுக்கிரகம்பெறுதற்குமுன்னரே செல்வம் வரலாயிற்று."'

அனுமான், தான் உண்மையாக இராமதூதனெனச் சீதை நம்புமாறு கூறுதல்.

[அனுமான், சீதையின் முகக்குறியால், அவள் தன்னைச் சந்தேகிக்கின்றாளென்று உணர்ந்து 'சந்தேகிக்காதே, என்னிடத்தில் இராமபிரான் கொடுத்தருளிய அடையாளப்பொருள் இருக்கின்றது. அன்றி, உனக்கும் அவனுக்குமே தெரிந்த சில நிகழ்ச்சிகள் அவன் என்னிடம் கூறியருளினவும் உள்ளன' என்று சொல்லிக் கீழே விழுந்து வணங்கி எழுந்து கைகூப்பிநின்றான். அவள், அவன் வார்த்தையும் தோற்றமும் அன்பைக் காட்டுவனவாகக் கருதியதனால் அருளும், ஒருகால் அகத்தே வஞ்சகமுடையனாய்ப் புறத்தே அன்புடையான்போல நடிக்கின்றானோ எனக் கருதியதனால் கோபமும் கொண்டு, பின்பு அவனைக் கூர்ந்துநோக்கி, இவன் உள்ளத்துள்ள நல்லெண்ணங்கள் இவன் முகத்திற் பிரதிபலித்தலால், இவன் தேவனாகவாவது முற்றத்துறந்த முனிவனாகவாவது இருக்கவேண்டுமென் றெண்ணினாள்.]

வந்தவன் எவனாயினும் என்? ராமநாமத்தைச் சொன்னான் உயிரை உதவினான் எனச் சீதை நினைதல்.

84. 'அரக்கனே ஆக, வேறோர் அமரனே ஆக, அன்றிக்,
குரக்கினத் தொருவனேதான் ஆகுக; கொடுமை ஆக,
இரக்கமே ஆக: வந்திங் கெம்பிரான் நாமம் சொல்லி
உருக்கினன்உணர்வைத்தந்தான்உயிர்: இதின்உதவிஉண்டோ?'

இ-ள். '(நான் சந்தேகித்தபடி இவன் குரங்குபோல வஞ்சகமாக வேடம்பூண்ட கொடுமையுடைய) இராக்கதனேயானாலு மாகட்டும், (அன்றி, எனக்கு நன்மைசெய்ய இரங்கிக் குரங்குவேடங்கொண்டு வந்த) தேவனேயானாலு மாகட்டும், (வேடதாரிகளான இவ்விருவரும்) அல்லாமல் (தோற்றப்படியே உண்மையிலேயும்) குரங்குக்கூட்டத்தைச் சேர்ந்த ஒருவனேயானாலு மாகட்டும்; (இவன் இராக்கதனாயிருந்தால், இவன் செய்யக்கருதியது கொடுமையாம். அப்படிக்) கொடுமையானா லும் ஆகட்டும்; (இவன் தேவனாயிருந்தால், இவன் வந்த காரணம் என் மீது கொண்ட இரக்கமாம், அப்படி) இரக்கமானாலும் ஆகட்டும்: (இவன் அரக்கனாயினும் அமரனாயினும், இவன் செய்தது *நன்மையே. இவன், தான் இருக்குமிடத்திலிருந்து எவ்வளவோதூரம் கடந்து நானிருக் கும்) இவ்விடத்துக்கு வந்து எம்பிரானுடைய திருநாமத்தை உச் சரித்து என் உணர்வை உருக்கினான். (அதனால் என்) உயிரை(ச் சாவா மல் காத்து) உதவினான். (எல்லா உதவிகளினும் உயர்ந்த உயிருதவி யாகிய) இந்த உதவிக்கு மேலான உதவியுண்டோ? (இல்லை).' (என்று சீதை யெண்ணினாள்.)

உணர்வை உருக்கினன், உயிர்தந்தான் என மாற்றுக. 'இதின்' என்பது அடுத்துவரும் 'உதவி' என்பதனால் 'இந்த உதவியினும்' என்ற பொருள்பட்டுநின்றது. தேவர், அரக்கருக்கு மாறானவராதலால் 'அரக்கனே ஆக' என்றபின் 'வேறோர் அமரனே ஆக' என்றாள். 'அரக்க னே ஆக' 'அமரனே ஆக' எனக் கூறியிருக்கும் வரிசைக் கியைய, 'அவர்கள் தன்மைகளைக் 'கொடுமை ஆக' 'இரக்கமே ஆக' என நிரல் படக்கூறியிருப்பது கவனிக்கத்தக்கது.

'இச் செய்யுளினால், சீதை இராமபிரானிடத்துக் கொண்டுள்ள போன்பு நன்குவிளங்கும்.'

[தொடரும்.]

வெ. ப. சுப்பிரமணியமுதலியார்.

---

*நன்மை, ராமநாமோச்சாரணத்தைக் குறித்தது.

காலம்.

வேலூர் S. M. D. H. ஹைஸ்கூல் தமிழ்ப்பண்டிதர்
வித்வான். K. S. விசுவநாதசாஸ்த்ரி, P. O. L. அவர்கள் எழுதுவது.

[ரு௦-ஆம் பக்கத் தொடர்ச்சி.]

வாரம்.

வாரமென்பது 7 நாட்கள் கொண்டதொரு காலப்பகுதியினை உணர்த்துமென்பதை அனைவரும் உணர்வர். இவ்வேழுநாட்களுக்கும் ஞாயிறுமுதலாய கோள்களின் தொடர்பு தோன்றுமாறு ஞாயிற்றுக் கிழமை (பானுவாசரம், சண்டே Sunday) திங்கட்கிழமை (இந்துவாசரம், மூன்டே=மண்டே Monday) என்று இவ்வகையே பெயரமைத்திருக்கின்றனர். இம்முறையே பெயரமைத்தது மாத்திரமின்றி ஞாயிறு முதலாக முறைப்படுத்தும்வகையிலும் அனைவரும் ஒருமித்த கருத்துடையராயிருப்பதும் கருதற்பாலதே. பழந்தமிழ்நூல்களுள் ஞாயிறு திங்கள்முதலிய சொற்களெல்லாம் பெரும்பாலும் ஞாயிறு திங்களென்னும் கோண்மீன்களையே (=ஒளிகளையே) குறிப்பனவன்றிக் காலக்கூறுகளைக் குறிக்கும் இயல்பின அல்ல. ஆயினும் பிற்காலத் தவ்வகை படைத்துக்கொள்ளப்பட்டதென்பது ஞாயிற்றுக்கிழமை (ஞாயிற்றுக் குரியது) என்பதுபோன்ற பெயர்களினின்றே உணரலாம். இவ்வேழு நாட்களையும் வாரமென்று குறித்து வழங்குவது புதியனபுகுதலேயாம். வாரமென்ற சொற்பிரயோகம் சிலப்பதிகாரத்து மிகுதியாகக் காணப்படுகின்றது. ஆனால் அவ்விடத்து அது,

> "வாங்கிய வாரத் தியாழுங் குழலும்
> ஏங்கிய மிடறு மிசைவன கேட்ப" (அரங். 50—1) என்றும்,
>
> "வார மிரண்டும் வரிசையிற் பாட" (ஷை 136)

என்றும் இவ்வாறு ஒருவகை இசையுருவம் தெய்வப்பாடல் முதலிய பொருள்களையே உணர்த்துகின்றது; கடைச்சங்கநூல்களுள்ளும் பெருவாரினதாகக் காணப்படவில்லை. எவ்வகையிலும் 7 நாட்களையுணர்த்தும் ஆற்றலுடைய வாரமென்னும் ஒருசொல் புதியதாகவே காண்கின்றது. இப்புதுமொழி எங்கிருந்து எவ்விதம் வந்திருக்கக்

கூடும்? என்று சிந்திப்போமாயின் ஒன்று தோற்றுகின்றது. அது தான் யாதெனின் நாளென்பதனை வடமொழியில் வாசரமென்பர். ஞாயிற்றுக்கிழமை முதலியவற்றை அவர் ஆதித்யவாசரம் சோமவாசரம் என்று வழங்க, ஆந்திரர்கள் அவற்றை ஆதித்யவாரமு சோமவாரமு என்பர். ஆகவே வடமொழி வாசரமே வாரமு என்று தெலுங்கில் திரிந்துவருவதுபோல் வாரமென்று திரிந்து வாரமு வாரமு அல்லது வாரம் வாரம் என்று முடியக்கூடிய 7 நாட்களையும் குறித்ததொரு மொழியாகித் தமிழிலும் திசைச்சொலென்றவகையிற் றழுவிக்கொள்ளப் பட்டதொரு புதுமொழியேயாகும்.

மாதம்

இனி மாதமென்ற பாகுபாட்டினைப்பற்றியும் சிறி தாராய்வோம். திங்களின் தேய்வு வளர்ச்சிகளையுடைய பிறையிரண்டும் சேர்ந்த அல்லது கதிரவன் ஒவ்வொரு ராசியிலும் நிற்கின்ற அல்லது ஏறத்தாழ 30 நாட்கள்கூடிய ஒருகாலப்பகுதியே இப்பொழுது நம்மால் மாதமெனப்படுவதாகும். இதனையே சிலர் திங்களின் தேய்வு வளர்ச்சிகளால் வந்ததென்கின்றனர். வேறுசிலர் ராசியுடன் ஞாயிறுகொண்ட தொடர்பாலுண்டாயதென்கின்றனர். மற்றும்சிலர் நக்ஷத்திரங்களோடு அம் மதிக்குண்டாய தொடர்பாற்றோன்றிய தென்கின்றனர். இன்னும் சிலர் மதியின் தொடர்பேயும் வேண்டாது நாட்கணக்கேயிடுகின்றனர். இவையனைத்திலும் ஒவ்வோரளவு உண்மையும் இருக்கின்றது. அதனையும் மேற் சிறிதுணரலாம். மாதம் என்னும் சொற்பொருளையாராயுமிடத்து அம்மாதம் என்னும் பாகுபாடுதான் திங்களின் தொடர்புபெற்றதென்றே நன்கு விளங்கும். இக்காலத்து நமது தமிழ்நாட்டில் வழங்கிவருகின்ற இச்சொல்—மாச என்பதன் தற்பவமொழியாகும். அம்மொழியும் மாஸ் என்றிருந்தே பிறகு மாஸமென்றாகியிருக்கிறது. மாஸ் என்பதற்குத் திங்களென்பது பொருள். ஆகவே திங்களின் தொடர்புபற்றியே மாதமென்ற பாகுபாடெழுந்ததென்பது தெளிவாகும்.

அன்றியும், தமிழ்மொழியில் திங்கள் என்றே பழந்தமிழ்நூல்கள் மாதத்தைக் குறிப்பிடுகின்றன. அவை வருமாறு:—

1 'திங்களும் நாளும் முந்துகிளர் தன்ன' (தொல். உயிர்மயக். 84.)

(ஐகார ஈற்று மாதப்பெயரும் நாட்பெயரும் இகர ஈற்றுத் திங்களும் நாளும் போல இக்கும் ஆனும் பெற்று முடியும். (உ. ம்.) சித்திரைக்குக் கொண்டான், கேட்டையாற் கொண்டான்)

2 'திங்கள் முன்வரி னிக்கே சாரியை' (தொல். உயிர்மயங். 46.)

(இகரஈற்று மாதப்பெயரின்முன் தொழினிலைக்கிளவி வரின் இக்கு சாரியையாம். ஆடிக்குச்சென்றான்.)

இவையன்றிச் 'சித்திரைச் சித்திரைத் திங்கள் சேர்ந்தென' (புகார்—இந்திர—64) 'ஆடித் திங்கட் பேரிருட் பக்கத், தழல்சேர் குட்டத் தட்டமிஞான்று' (வஞ்சி—கட்டுரை 133) என வரும் சிலப்பதிகாரத் தொடர்களும் 'திங்கள் வலித்த காலன் னோனே' என்ற புறப்பாட்டின் பிரயோகம் முதலியனவும் இதனை நிலைநாட்டும்.

மதியென்றும் மாதத்தைக் குறிப்பதுண்டு.

'யாண்டும் மதியும் நாளும் கடிகையும்' (நீர்ப்படை—9)

என்ற சிலப்பதிகாரமும்,

'யாண், டிருது மதிநா ளாதிக் காலம்'

என்றதுபோன்ற பிற்காலத்துப்பிரயோகமும் இதனையுணர்த்தும்.

இவ்வாறு திங்கள் மதி என்னும் தமிழ்வழக்கும், 'நெல' வென்பதனுற் சந்திரனையும் மாதத்தையும் உணர்த்தும் தெலுங்கர்வழக்கும், அவ்விதமே கன்னடமொழியிலும் கண்ணும் 'திங்களு' என்று மாதத்தைக் குறிப்பிடுவதும் இதனை வற்புறுத்தும். தெலுங்கு நெலவுக்குத் தமிழ் நிலவோடு தொடர்பும் கூர்ந்து காணத்தக்கதாகும். தமிழில் நிலா நிலவு சந்திரன் என்று பொருள்படுவது காண்க. தமிழ்த்திங்கள்கூடக் கன்னடத் திங்களுவினின்றும் உகரக்குறைந்திருத்தலாகிய வேற்றுமை யொன்றே பெற்றிருக்கின்றது. இம்மொழியனைத்தும் தமிழ்க்குடும்பத்தைச்சார்ந்தனவேயாதலின் இத்தகையவொற்றுமைபெற்றிருப்பதும் இயற்கையே. ஆங்கிலமொழியிலுங்கூட மூன் (Moon), மன்த்(Month) என் றிரண்டுமொழிகளின் இயல்பும் மதியின்தொடர்புடையது மாதப் பாகுபாடென்ற உண்மையினை வலியுறுத்தும். ஆனால் முதன்முதல்

ஆங்கிலேயர் யாண்டைப் பத்துமாதமேயுடையதாகப் பகுத்துவைத்திருந்தனர் என்றும், கி. மு. முதல்நூற்றாண்டினரான ஜூலியஸ்ஸீஸர் அகஸ்டஸ் என்ற இவ்விருவரின் பெருமைகருதி அவர்களின் ஞாபகார்த்தமாக ஜூலை, ஆகஸ்ட் என்ற இரண்டுமாதங்களையும் சேர்த்துப் பிறகு பன்னிரண்டுமாதமாகப் பகுத்தனர் என்றும் ஆராய்ச்சியாளர் சிலர் கூறுகின்றனர். ஸெப்டம்பர் முதலிய மாதப்பெயர்களின் இயல்பைக் காண்போமாயின் அவ்வாராய்ச்சியாளரின் கூற்றிலும் ஓரளவு உண்மை உளதென்பது வெளியாகும். வடமொழிக்கும் ஆங்கிலமொழிக்கும் மொழிக்குரிய உறவுண்டென்று மொழிநூலார் இயம்புகின்றனர். அவர் கூறுகின்ற உறவும் இங்குத் துணைசெய்கின்றது. அதுதான் என்னை எனின், 'ஸப்த' என்பது வடமொழியில் ஏழு என்னும் பொருளுடையது, ஸெப்டம்பர் என்ற மாதப்பெயரோடு தொடர்புடையதாகக் காணப்படுகின்றது. இதனை நோக்க இது முதலில் ஏழாவதுமாதத்தின் பெயராக அமைந்திருக்கவேண்டும். இவ்விதமே 'அஷ்ட' என்ற வடமொழிக்கும் அக்டோபர் என்ற மாதப்பெயருக்குங்கூட இவ்வியல்பு அமைந்திருத்தலின் அக்டோபர் என்பதும் முதலில் எட்டாவது மாதத்தின் பெயராகவே வழங்கப்பெற்றிருத்தல்வேண்டும். நவம்பர் என்பதைக் காண்போமாயினும் 'நவ' என்னும் வடசொல்லோடு தொடர்புடையதாகத் தோற்றுவது புலனாம். ஆகவே அதுவும் முன்பு ஒன்பதாவது மாதமாகவே வழங்கியிருத்தல்வேண்டும். டிஸம்பர் 'தச' என்பதனோடு தொடர்புகொண்டதாகக் காண்டலின் அதுவும் பத்தாவதுமாதமாகவே வழங்கியிருக்கவேண்டும்.

இவ்வாறாகவே ஜூலை ஆகஸ்ட் என்ற இரண்டும் பிற்காலத்தில் இடையிலே புகுந்தன என்றும் பிறகு யாண்டு பன்னிரண்டு மாதமுடையதாகப் பகுத்துக்கொள்ளப்பட்டதென்றும் தெளிவாகின்றது.

இதனால் மாதக்கணக்கிடுதலிற் சந்திரனுக்குத் தொடர்புண்டென்று ஆங்கிலேயர் உணர்ந்திராதகாலமும் ஒன்று உண்டு என்பதும் அக்காலத்திலுங்கூட நமது தமிழ்மக்கள் மதிக்கும் மாதத்திற்கும் உள்ள தொடர்பை அறிந்திருந்தனர் என்பதும் நன்கு புலனாகின்றதன்றோ.

இவ்வியல்பினை உணர்ந்த நம் முன்னோர்சிலர் வளர்பிறையின் முதல்நாளையே மாதத்தின் முதல்நாளென்கின்றனர் வேறுசிலர் தேய்பிறையின் முதல்நாளே மாதத்திற் காரம்பமென்கின்றனர். இத்திங்கள் தானும் நக்ஷத்திரந்தோறுஞ் சென்று அந்த நக்ஷத்திரமண்டலத்தை ஒருமுறை வட்டமிடுவானாயின் அஃ தொருமாதமென்பாரொருசாரார். இவ்விதமே சந்திரனைக்கொண்டு கணக்கிடுதலைச் சாந்திரமானமென்பர் சோதிடநூலோர்.

ஆனால் இக்காலத்து நாம் வழங்கிவருகின்ற சித்திரை வைகாசி முதலியன மேற்கூறிய பாகுபாட்டினின்றும் வேறுபட்டனவாகும். என் எனில் மேடம் முதலிய இராசிகளிற் கதிரவனது கதிநோக்கி நாம் கணக்கிடுகின்றோம். கதிரவன் மேடத்துக்குச்சென்றதுமுதல் இடபத்திற் கேகும்வரையில் சித்திரையென்கின்றோம். இவ்விதமே அவன் இடபத்திலிருக்கும் காலத்தை வைகாசியென்கின்றோம். மற்றைமாதங்களையும் இவ்வாறே மிதுனம் முதலிய இராசிகளைக்கொண்டு கணிக்கின்றோம். நாம் சித்திரை வைகாசி என்றோமாயினும், சேரநாட்டவர் அந்த அந்த இராசிப்பெயராலேயே [மேடம் இடபம் என்று இவ்வகைப் பெயராலேயே] மாதத்தைக் குறிப்பிடுகின்றனர். நமதுநாட்டிலுங்கூடப் பிற்காலத்துக் கவிகளாய கம்பர் முதலியவர்களும், 'மேடமா மதிதிதி நவமி மீன்கழை' என்பதுபோல் இராசிப்பெயரால் மாதத்தைக் குறிப்பிடுதல் காண, அவ்வழக்கும் இருந்திருக்கவேண்டுமென்று தோற்றுகின்றது. இம்முறையே சூரியனைக்கொண்டு கணிக்கின்ற முறைக்குச் சௌரம் என்று பெயர் கூறுவர். இச் சாந்திரம் சௌரம் என்ற இரண்டு முறைகளுள்ளுஞ் சாந்திரமானமே மாதக்கணிப்பு முறையில் முந்தியதாகுமென்பதை மாதமென்று பெயர்குறித்தமையே தெரிக்கும். இக்கருத்திற் குதவிபுரிவது திங்கள் என்று பொருள் படுகின்ற 'மாஸ்' 'மாச' மாகி மாதமெனவழங்கிவருவதொன்று. தமிழ்த்திங்களும், தெலுங்கின் நெலவும், கன்னடத்துத் திங்களுவும் மாதத்தைக் குறித்துநிற்பது மற்றொன்று.

அன்றியும், சித்திரை முதலிய பெயர்களெல்லாம் நக்ஷத்திரங்கட்கும் சந்திரனுக்குமுள்ள தொடர்பே குறித்துநிற்றலும் காண்க. எக்காலப்பகுதியிற் சித்திரைநாளன்று பூரணை கூடுகின்றதோ அஃதே

சித்திரைமாதமாம். இவ்விதமே விசாகமும் பூரணையும் கூடுமாயின் வைசாகியாம். அதே வைகாசியாயிற்றென்பர்.

இம்முறையே நாம் அமைதியுணர்ந்து சொல்லுமிடத்து ஆஷாடி ஆடிஆயிற்றென்றும், சிராவணி ஆவணியாகியதென்றும், ஆசுவயுஜி ஐப்பசியானதென்றும் இவ்வகையே பங்குனிவரையிலும் காணக்கிடக்கின்றது. ஆனாலும், ஆனியொன்றே இம்முறையி லமையாததுபோல் காண்பதாகும். அதனைக்குறித் தீண் டொன்றுணரற்பாற்று. அஃதியாதெனின் ஆனிமாதத்தை ஜ்யேஷ்டமென்ற பெயரால் வழங்குகின்றனர். அதுதான் முற்கூறியவாறு திரியுமிடத்துத் தமிழிற் கேட்டையாகும். இக் கேட்டைதானும் கெடுதலென்னும் பொருளுணர்த்துமியல்புடையதாதல் நோக்கி அம்மொழிதனை ஒரு மாதத்தின்பெயராக்காமல் ஒதுக்கினர். ஆன் அல்லது ஆனு என்ற மொழி நன்மையென்னும் பொருள்தந்து நிற்றலின் அதனையுடையது ஆனியென்று மாதத்திற்குப் பெயர்குறித்தனர் என்று அறிவுடையோர் மொழிவதை மனதுட்கொளல்வேண்டும். முற்கூறியவாறு திங்களின்தொடர்புபெற்றிருக்கும் தொன்மைவழக்குநோக்கியே சாந்திரமானக்கணக்கு முந்தியதென்றுரைத்ததாகும். முதன்மறையாகிய ரிக்வேதத்திலும் "தெய்வீக சக்தியினால் பன்னிரண்டு பிறப்போடுகூடிய சந்திரனையும் அவன் உண்மையாக அறிகின்றான்" என்ற செய்தி காணப்படுகின்றது. இச்செய்திதான் யாண்டின்கண் தோன்றும் பன்னிரண்டுமாதங்களையும் குறிப்பதோடு மாதங்களும் சந்திரனது தேய்வு வளர்ச்சிகளைக்கொண்டு கணிக்கப்படுமென்ற உண்மையை வெளியிடுகின்றது.

ஆயின் இச் சௌரமானக்கணக்குத்தான் எற்றுக்கெழுந்ததெனின் இச்சூரியனைக்குறித்தே யாண்டுக்கணக்குச்செய்துகொண்ட நம்முன்னோர் யாண்டிற்கு 12 மாதமேயென்று வரையறுக்கவியலாவகை சிற்சில வருடங்களிற் சந்திரன் 13 பிறப்பும் கொள்ளவே அக்குறைபாடுநீக்குதல்வேண்டிக் கதிரவன் மேடம்முதலிய இராசிதோறும் நிற்கும் அத்தொடர்பையுணர்ந்து மாதத்தையும் 12 ஆகவே வகுத்துக்கொண்டனர். அதன்பிறகுஞ் சாந்திரமானத்தை முழுதும் ஒழித்திலர். 13 மாதமானாலும் அதனை அதிகமாதமெனக் கழித்து மாதத்தைச் சந்திரனைக்கொண்டேகணித்துச்செல்லுகின்றவர் ஒருசாரார். மற்றொருசாரார் சௌர

மானத்தையே முழுவகையிலும் மேற்கொண்டவர். அவர் மேடம் இடபம் என்று இவ்வகையே மாதப்பெயர் தந்து வழங்குவர். ஆனால் தற்காலத்து நாம் கொண்டிருப்பது சாந்திரம் சௌரம் இரண்டும் கலந்த தொருமுறையேயாகும். நமது பழந்தமிழ்மக்கள் மாதப்பாகுபாட்டினால் காலத்தைக் குறிப்பது சிறுபான்மையே. பெரும்பாலும் பருவப்பாகுபாடுகொண்டே காலத்தைக் குறிப்பிட்டனரென்பது அகப்பொருளியல்புணர்ந்தார்க்கு நன்குபுலனாகும். முதன்மறையும் இவ்வியல்பே பெற்றிருக்கின்றது. அங்கு மாதப்பாகுபாட்டினும் பருவப்பாகுபாடே மிகுந்திருப்பது காணத்தக்கதாகும்.

[தொடரும்.]

மதிப்புரை.

மதுரைக்கோவை: ஐந்திணைக்கோவையென்னும்பிரபந்தவகையைச் சார்ந்த இது, இற்றைக்கு முந்நூறாண்டுகட்குமுன்னரே இயற்றப் பெற்றது; இதுகாறும் அச்சிடப்பெறாதது. இலக்கணவிளக்கவுரையில் இதன்செய்யுட்கள் சில மேற்கோளாக வழங்கியுள்ளன.

இந்நூல் மிகவும் செம்பாகமான இனிய நடைதழுவிச் செல்கின்றது. இதனை இயற்றியவர் நிம்பை என்னும் வேம்பத்தூரில் வாழ்ந்தவர்; சங்கரநாரணர் என்னும் இயற்பெயருடையவர். இவர் மதுரைச் சொக்கரையும், வைகைநதியையும், செந்தமிழ்மொழியையும் கோவைத் துறையின் இடையிடையே மனமுருகிப் பாராட்டியுள்ள பாடல்கள் மிக்க சுவைபயக்கின்றன.

இவ்வரிய பிரபந்தத்தைச் சென்னைச் சர்வகலாசாலைத் தமிழ் லெக்ஸிகன் பதிப்பாசிரியர், ஸ்ரீமாந். S. வையாபுரிப்பிள்ளை (B.A., B.L.) அவர்கள் பிரதிகண்டு பெயர்த்தெழுதிச் செவ்வனம் பரிசோதித்து, முன்னுரை, செய்யுண்முதற்குறிப்பு, பொருட்குறிப்பகாதி என்பவை கூட்டி அச்சியற்றியிருக்கின்றனர். அன்னார் பல ஆராய்ச்சியுரைகள் தாமே எழுதியும், இலக்கண இலக்கிய நிகண்டு நூல்களைப் பதிப்பித்தும் தமிழ்ப்பணி புரிந்து தகவுடன்விளங்குபவராகையால், அவர்களுதவிய இம் மதுரைக்கோவையும் பலரும் விரும்பிப் பயன்கொள்ளற்குரியதே. இதன்விலை அணா 8. வேண்டுவோர் பதிப்பாசிரியரவர்களிடம் பெறலாம்.

ஜீவரக்ஷகன்:—இது, தென்னிந்திய ஜீவரக்ஷாப்பிரசாரசபையி னின்றும் மாதம் ஒருமுறை வெளிவரும் ஒரு தமிழ்ப்பத்திரிகை. இதன் தொகுதி 5ல் பகுதி 1 வெளிவந்திருக்கிறது. அதில் ஜீவ காருண்யத்துக்குரியனவும் அறிவுவளர்ச்சிக்குரியனவும் படிப்பவர்க் கின்பம்பயப்பனவுமாயுள்ள வேறு வேறு விடயங்களும், தற்காலநிகழ்ச்சி யான செய்திகளும் வரையப்பட்டுள்ளன. இப்பத்திரிகை சென்ற நான்கு ஆண்டுகளாக ஜீவகாருண்யத்துக்கே உழைத்துவந்து அவ்வளவி னமையாது இவ்வாண்டின் தொடக்கத்திலிருந்து நம் நாட்டின் முன் னேற்றத்துக்கேற்றவாறு பலதுறைகளிலும் அறிவுவளர்ச்சிக்குரிய பொருளுரைகளு முடையதாய் வெளிவருமென்று தெரிகிறது. இப் பத்திரிகை பல கனதனவான்கள்கூடிய சங்கத்தினின்றும் வெளிவருவ தால் நன்கு நடைபெறுமென்று தோன்றுகிறது. கல்வி அறிவு ஆற்ற லமைந்த திருவாளர் C. S. மல்லிநாதன் அவர்கள் இதன் ஆசிரியரா யிருந்து நடத்துதலால் இது பல நல்லவிஷயங்களைக்கொண்டு வெளி வரக்கூடியதே. உத்தேசம் 56 பக்கங்களடங்கிய இப்பத்திரிகையின் வருடச்சந்தா உள்நாடுகளுக்கு ரூ. 1–0–0. வெளிநாடுகளுக்கு ரூ. 1–8–0. தனிப்பிரதி அணா 0–1–6 வேண்டுவோர் தென்னிந்திய ஜீவரக்ஷாப்பிரசாரசபை, தங்கசாலைவீதி, சென்னை என்ற விலாசத்திற் பெறலாம்.

வேட்டொழிவ	141
வேண்டியபோ	128
வேத்தமர்செய்	102
வேதம்பசு	440
வேதமுதல்வ	54
வேதமொழி	361
வேதாந்தங்	431
வேம்பாகிலு	226
வேயீன்றமுத்தர்	363
வேரறுகை	109
வேரிக்கமழ்	80
வேறுருமாலுதவும்	312
வேலணைத்த	436
வேலியர்கோன்	247
வேலைமடற்	510
வேழமுடைத்து	495
வேளாமழகன்	301
வேளைநடுங்	270
வேற்கண்மடவார்	74
வேற்றுச்சுரத்	123
வேனில்வெயிற்	508

வை

வையகமடந்தை	378
வையகமெல்லாங்கழனியா	499
வையகமெல்லாம்	94
வையங்குருடன்றே	430
வையம்புகழும்	295
வையம்புரக்கும்வராம	374
வையம்புரக்குமான்	126
வையம்பெறினும்	265
வையைக்கிழவன்	139
வையைத்துறைவன்	325
வைவத்துரங்	288

பெருந்தொகைப் பொருட்குறிப்பகராதி.

[எண் - பாட்டெண்.]

அஉ அறியாமை 1422
அஃகுவஃகெனல் 1423
அஃதான்று 294, 724, 866
அக்கசாலை 416
அக்கரச்சுதகம் பக். 527
அக்கரை(ச்சீமை) 1797
அக்கு 1655
அகங்கை புறங்கையாதல்300
அகணிதன் 193
அகத்தியம் 1384, 1387, 1722
அகத்தியமுனிவர் 839, 925, 1342, 1384, 1357, 1444, 1562—4, 1716, 1719, 1790, 2109
அகத்தியர் அவலோகிதன்பக்கல் தமிழ் கேட்டவர் 1465
அகத்தியர்பால் பாண்டியன் தமிழ் கேட்டது 887, 896
அகத்தியரைப் புரோகிதராகப்பெற்ற வன் பாண்டியன் 892, பக். 586
அகத்தியனார்மாணாக்கர் பன்னிருவர் 1719, 1562–3, பக். 629
அகத்தியனாராணை 1395–6, 531
அகத்தோன், அகமிசைக்கிவர்தல் 465;—எயில்காத்தநொச்சி 471–2;—ஏணிமயக்கம் 466;—குடைநாட்கோள் 463;—செல்வம் 460-1;—முற்றியமுதிர்வு 468; - வாண்மங்கலம் 473;—வாணாட்கோள் 464
அகநானூறு 1384 — அகவற்கருத்துரை 1535;—பாடல்களை உருத்திரசன்மர் கோத்திட்டமுறை 2014
அகப்பொருள்விளக்கம் உரையுடன் நம்பி இயற்றியது 1562
அகம் - அகநானூறு 2007, 2016
அகம்பன்536
அகரமியற்றுதல் 938
அகராதிநிகண்டு2082-7
அகலிடம் 889
அகவற்கருத்துரைகாரர் (அகநானூறு) [1535
அகவை - பிராயம் 764
அகளங்கச்சோழர்சரிதம் 1950
அகளங்கதுங்கன் 1486
அகளங்கன் 637, 813-4, 816–7, 821, 1182, 1222, 1417, 1477, 1484; பக். 235
அகளங்கன்வீதி 24 [மாள் 1138
அகிலகலாவல்லவன் சேரமான்பெரு
அகிலப்பிரகாசன் 1256
அகிபதி 892
அகிலேசர் 950, 953, 1737
அகையழலழூவம் 394
அகோ 204
அங்கதம் 1401—வெண்பாக்கள் [1395-6
அங்கதேசம் 1294
அங்கம்(-ஜைனாகமம்) 151, 159, 163
அங்கமிலாதவனங்கன் 644
அங்கயற்கணம்மை 1269, 1282, [1666
அங்கர் 819
அங்கராகம் 892
அங்கவை சங்கவைகள் 1403, 1407-8
அச்சன் 974, 1002-6, 2040
அச்சுதகளப்பாளன் 1002-6
அச்சுதநந்தி 974
அச்சுதன் (அரசன்) 15
அச்சுதானந்தன் 1005
அச்சுவத்தாமாவின் போர்த் தொழில் [762
அசஞ்சலன் 645
அசமசமன் 889
அசாதுநவாபு 1796-7
அசுணம் 386
அசுவபதி 1047
அசுவமேதம் 783
அசோகையன் 784, 786
அஞ்சகேது 783
அஞ்சி 986
அஞ்சாலிமக்கள் 1735
அஞ்சிபாடிய அவ்வை 986
அஞ்சுதகுதல் 443
அட்ட பக். 558
அட்டதிக்குப்பாலகர் 1238
அட்டமத்துச்சனி 410
அட்டமியில் ஓதல் 358
அட்டமூர்த்தம் 37, 1536
அட்டவீரட்டம் 21, 88, 1047

அட்டாலேமண்டபம் 923
அட்டாவதானசிங்கம் 1797
அட்டாவதானம் 1790, 1794-5
அட்டாவதானன் பக். 640
அட்டாவதானி சரவணப் பெருமாட்
அட்டெ பக். 558 [கவிராயர் 1788
அட்டையாடுதல் 540
அடர்வினைப்பொலிதல் 1426
அடி (முன்னிலைச்சொல்) 1600
அடிநிரனிறை 2132
அடிபிறக்கிடு 470
அடிபுனைதோல் 437
அடிமடக்கல் 1793
அடிமைக்குமடிமைக்குமடிமை 1795
அடியவர்க்குதவாச் செல்வம் 285
அடியளந்தகோல் 1231
அடியார்க்குநல்லார் 1556-9;—பாட்டு.
அடுகளம்வேட்டல் 580 [1552
அடைப்பைகட்டுதல் 1203
அடைப்பையான் 863
அடையாதவாசல் 1382, 1495
அண்டநாடு 2106
அண்டவாயு 2150
அண்ணல்வாயில் 1019
அண்ணாக்குதல் 1423
அண்ணாமலைக்குருசில் 1383
அண்ணாமலைரெட்டியார் 1922
அண்ணாள்வி 955
அணவருதல் 100
அத்திகிரி 30
அத்தியூர் 2129
அத்து 928
அத்துவிதம் 2050
அத்தை-அதனை, 352;-அசை 705
அதங்கோட்டாசான் 1989
அதா அன்று 688
அதிகமானால் சிறப்பெய்தியவீரன்
1420—ஔவை நெல்லிக்கனிபெற்
அதிகாரவணிகர் 1433 [றது 983
அதிகை 1095-1119, 1914;—வீரட்
அதிசயன் 882 [டம் 88, 1112, 1119
அதிதீரன் 933
அதிமதுரக்கவி 1588-93; பக். 371
அதிமதுரம் 1589
அதியன் 890
அதிரசம் 1639

அதிராசேந்திரன் 787
அதிவீரபாண்டியன் 957, 1347
அதிவீரபூபதி 1632
அதிவீரராமபாண்டியன் 957, 1632-6;
—தாய் 1635; பக் 219
அதிவீரன் 1633; பக். 219
அதுலன் 644, 805
அந்தகக்கவிவீரராகவமுதலியார் 1253,
1677-88; பக். 279; 304;—கச்சி
யிற்படித்தது 1677;–இறந்தபோது
கயத்தாற்றுராசா பாடியது 1696
அந்தகன், அந்தகற்காறுசொலல் 265;
—நாயகனால் பெண்ணைச் சிங்கா
ரித்துப் பயனின்மை 357
அந்தணர், அரசர்முடிமேல் மந்திரநீர்
வார்த்தல் 571;—ஏற்றற்சிறப்பு
289;–வேள்வியாற்றல் 3;–ஆவொடு
பொன்பெறுதல் 569
அந்தணாளர்கேட்கக்கூறி அரசன்
ஊர்களைத் தானமளித்தல் 889
அந்தம்-தெய்வீகமடைகை 1877
அந்தாதுந்துபி 173, 188
அந்தரிட்சம் 1047
அந்தாதி 362 [1739, 1747
அந்திமதசையிற் பாடிய கவி 1513,
அந்திமாலை 1010, 2181
அங்கிரர் 783
அந்திவண்ணன் 893
அநதாரிப்புலவர் 1265
அப்பணை 702; பக். 574
அப்பம் 1639
அப்பரின் வயது 1877;—இருநட்சத்
திரம் 1878;—சொல்லினுறுதி
1802;—இயற்றிய பாடல் 1875
அப்பா 1640
அபங்கன் 821, 1324
அபங்குரன் 820
அபராஜிதவிக்கிரமவர்மன்வாக்கு 1982
அபயன் 809-10, 824, 1120, 1470,
1491, 1523, 1986;—படைத்தலை
வன் 1080; [பாடியது 1470; 180
அபயனிடம்சினந்துசெயங்கொண்டார்
அபிடேகம் 1079
அபிடேகமண்டபம் 906
அபியுத்தர்பாட்டு 1692
அபிராமம் ஆவண 403

அபிராமன் 956, 1254, 1627
அம்சவவதாரம் 1654
அம்பட்டர் 1735
அம்பணை 702
அம்பர் 2099
அம்பர்க்கணபுரத்தேவன் 1529
அம்பர்ச்சிலம்பி 1454
அம்பர்ச்சேந்தன் 2071, 2074—பாடியவை 2075-6
அம்பர்நாடன் 1047
அம்பலத்தில் தங்கல் 1463;—வறல் 1600
அம்பலந்தாதன் 1065
அம்பலவாணத்தம்பிரான் 1724
அம்பலவாணதேசிகர் 1719
அம்பிகாபதி (சிவன்) 56; 1564, 1659-60;—பாட்டு 646; பக். 141
அம்பிகைமாலை 2064
அம்பிட்டெய்யுந்தூரம் 891
அம்புலிநதி 2148
அம்போதரங்கவகை 39, 166
அம்மானை 110
அம்மூவன் 2010
அம்மெனல் 1590
அம்மைச்சி 1685
அம்மையப்பன் 1729
அமரவிடங்கர் 1349;—குறவஞ்சி பக். 307
அமராபதி 648
அமராபரணன் 2032
அமரி 108
அமரிக்கையாளன் 1302
அமருணிலையாயின குலாலங்காஞ்சன் 1015
அமிதசாகரமுனி 1218-9; பக். 603
அமிர்தசாகரம் 1974
அமிழ்தினுமினிய தமிழ் 1719
அமுதசாகரர்-அமிதசாகரமுனி பார்க்க
அமைத்தல்-அடக்குதல் 1110
அயக்கிரீவர் 1855
அயம்பைச் சேந்தன் 996
அயாவுயிர்த்தல் 140
அயிந்தன் 1391
அயிராவதம்-பட்டத்தியானை—1175-6
அயிரூர் 890
அயிண்றைச் சடையன் 1147
அயோத்தி 2089
அயோத்தியராசசோழன் 784
அர்ச்சிராதிமார்க்கம் 1850
அர்த்தநாரீசுவரர் 1346
அர்த்தமாகதிபாஷை 132; பக். 529
அரக்கர்கோ 461
அரக்கர்வேண்டப் புத்தர் மெய்க்குருதி அளித்தது 191;—ஐவர்க்குப் புத்தர் அறமுரைத்தது 188
அரகரவெனல் 1047
அரங்கம் 23
அரங்கமணவாளன் 1835
அரங்கேசவள்ளல் 1230
அரசகேசரி 1674
அரசர்க்குரிய எழு 743
அரசராகவன் 1010
அரசராண்டி னளவைப் பகையரசர் கழுத்திமணியில் அமைத்தல் 807
அரசராண்டு-802, 892, 1120, 1122, 1218-9
அரசற்குச் சென்றநாழிகைக்குக் கவிபாடுகை 466
அரசன் உடனுண்டு படையை உபசரித்தல் 566
அரசியற்சிறப்பு 349
அரசு 205
அரசுணங்குமுற்றம் 1002, 1103
அரசுநுகம் 724
அரசூர்ச் சிநக்கன் 1458
அரசூர்ச்சொக்கப்புலவர் 1952
அரசூர்ப்பத்து 1907
அரசை 1452
அரசொடுநட்டவர் விருத்தியாளல் 393
அரந்தை 427
அரமகளிர் 539
அரவக்கொடியோன் 533, 761
அரவக்கண்ணி 899
அரவாசலர் 1734
அரவாட்டியுண்ணல் 393
அரவின்மணியளித்தவன் 1152
அரவின்வாயிற்கையிட்டவன் 1228
அரிகால் 2095
அரிகேசரி 889;—நெடுமாறன் 867-888;—பராக்கிரமபாண்டியன் 938, 949, 950
அரிகேசரிமன் 945
அரிச்சந்திரன் 1356
அரிச்சந்திரபுராணம் 1661
அரிச்சந்திரவெண்பா 1661-2
அரிசிமாற்றுநீர் 1131
அரிசில்கிழார் 483, 1426, 1430
அரிசிவிளைத் தமுதளித்தது 21

அரிதாசர் பக். 635
அரிபிரமர் புத்தரைத் தொழுதது 213
அரியணை 140
அரியலூர்த்தலைவர் 1257 பக்.607
அரிவர்க்கம் 2089
அருகக்கடவுள் பக். 32—48;—ஒரு பொருட்கு இருதுணிபுரைத்தது 140;—காமனைக்கறுத்தல் 170;—கேவலந்தோற்றியவர் 140
அருகலர் 612
அருங்குன்றம்(மலை)183
அருச்சுனன் 591, 752;—கயிலாய யாத்திரை, பக். 560
அருட்பண்பு-திருவருட்பயன் 2044
அருண்மொழி 781
அருண்மொழித்தேவன் 1883
அருணகிரிநாதர் பக். 621-கருணையின் சிறப்பு 1803;-வாக்கின்சிறப்பு 1802
அருணந்தி 2059;—தேவன் 2055;-சிவாசாரியர் 1837
அருணமாஞ்சிலை 2207
அருணாசலக்கவிராயர் 1763
அருணாசலவீரவசந்தன் 1375
அருணெறிகடாத்துதல் 134, 173
அருத்தமண்டபம் 1965 [581
அரும்பகைத்தொள்ளாயிரம் 813; பக்.
அரும்பண்டங்கள் 1148
அரும்பு-காமன்கணை 216
அரும்பு கொத்து 1606
அரும்புடையான்மகன் 1229
அரும்பைத் தொள்ளாயிரம். பக். 581
அரும்பையர்கோன் 1081
அருமொழி 1979 [1122
அருமொழித்தேவ சதுப்பேதி மங்கலம்
அருவந்தை 2072;—சேந்தன் 2074
அருவர் 803
அருவாவதன்வடக்கு பக். 495
அருவாள் வடதலை (நாடு) 2107
அருவாளர் 414
அருவுருவநிலை 52
அருளகழி 154
அருளாகரநல்லூர் 1110
அருளாழி 140, 189
அருளாளப்பெருமாள் 1842
அருளாளமாமுனி 1842
அருளாளர்-ன் 186, 1223, 1831
அருளுடைமை 316-7
அருளையர் 1964
அரைக்காசு 1758; பக். 402
அரைகுறை 1197
அரைசு 783, 2170
அரைஞாண் 1009
அரையநாடு 2106
அரையர்கோவை பக். 283
அல்காலம் 1557, 1580
அல்குல்-இடை 112, 459
அல்லமதேவன் 1930-1
அல்லாத்தல் 312
அல்லாள திருமலை 1342
அல்லாளன் இளையான் 1342
அல்லாளியப்பர் 1573
அலகுதிறந்தன்ன பல் 1463
அலகைக்கதை 1786
அலர்க்குறி 1328, 1375
அலவனளையில் நரி வானீட்டல் 1000
அலவனூழத வரப்பு 999
அலைவாழ்க்கை 412
அவ்வியம் 201
அவ்வை (ஔவைபார்க்க) 986;-பாடிய அம்பர் கிழவன் 2073;
அவசத்தம் 1490
அவசயப்படுதல் 1151
அவதரித்தல் (உயிர்) 186, 1003
அவதான புனிதன் 1791
அவதானி 1795
அவதானித்து நூல்சொல்லல் 1678
அவந்தியார்கோ 767
அவரை பதமாகுமுனங் கடுகு பொடியாதல் 1339
அவலோகிதன் 1465
அவற்பதத்தநெல் 1001
அவனிசூளாமணி 889
அவனியாடை 1010
அவித்தநெல் முளைத்தது 114
அவித்தல்-அழித்தல் 100; 395
அவிநயம் 569
அவிநயனார்-177; பக். 533
அவிப்பலி 545, 757
அவிப்பாகம் 1714
அவியுணவினர் 1038
அவிரோதப்பணிப்பணி 895
அவிரோதவுந்தியார் 1959

அவையத்தாரியல்பு 367-9
அவையின் எட்டுறுப்பு—367-9; பக். 544
அழகப்பெருமாள் 1261
அழகன் குலசேகரன் 909, 955
அழகன் அதிவீரராமன் 957
அழகிய மணவாளதாசர் 1738
அழகியமணவாளநயினார் 1851-3
அழிகூத்தி 1610
அழிசிகாடு 988
அழிசியார்க்காடு பக். 593
அழியுஞ்சொல் 627
அழிவழக்கு 374-5
அழுங்குதல் 700
அழுந்தியூர் 1012
அழுந்துபடப்புல்லுதல் 532
அழுந்தூர் 2126—போர் 1012
அளகம் வைக்கோற்கழிகற்றையாதல் 1617
அளகேசர் 2115
அளத்தி 799
அளைப்புலி 443
அற்காலம் 1558
அற்புதமூர்த்தி 2052
அற்றம்பார்த்தல் 635
அற்றமறிந்த அறிவு 580
அறக்காவல் 382
அறங்கரைநா 1989
அறஞ்செய்தார் 233
அறஞ்செய்யாதார் 234
அறத்தின்பெருமை 225
அறந்தை 938
அறநூல் 180, 197
அறப்படைமூன்று 159
அறப்புணை 167-8
அறப்புறம் 580
அறம் இறங்குதல் 1047
அறம்வளர்த்தமுதவியார் 1636;—கலம்பகம் 1636, 1246
அறமாவது 221
அறமுரைத்தான் 1451
அறவழக்கம்—தருமோபதேசம் 206
அறவாழி 167-169
அறவாழியான் 149, 155
அறவுரை 1391
அறவைப்பிணஞ்சுடுதல் 1230
அறவோன்மறம் 757
அறிகரி 1768
அறியாமை கடவுட்கு ஆராதனை 20
அறியாமையான்வருங்கேடுகள் 264
அறிவன் 149, 174, 177, 200, 205
அறிவன்வாகை 558
அறிவனூற்பொருள் 1536
அறிவானந்தசித்தி 1920
அறிவானந்தர் 1920
அறிவின்மை 264-5
அறிவுடைமை 359
அறிவுடையரனார் 1384
அறிவுடையோர்செய்திறம் 361
அறிவு வீணாகுமிடம் 243
அறிவுறீஇ 2186
அறுகவை 409
அறுகாற்பீடம் 1620
அறுகிடல் 46, 1411
அறுகெடுத்தல் பக். 618
அறுகை பம்பிச் சுரை படர்ந்து வேளை பூத்தல் 494
அறுசமயத்தறநெறி 897
அறுபத்துநாற்கலை 2082
அறுபத்துநான்குதிருவிளையாடல் 1656
அறுபத்துமூவர் 951, 1646, 1872
அறுபொருள் 140
அறுமுகவொருவன் 3
அறுவகைச்சமயம் 897, 906
அறுவகைப்பெருநிலை 295
அறுவர் முருகற்கு முலையூட்டியது 100
அறைபறையானை 626
அன்பது 1047
அன்புடையார் 244
அன்வயாகதம் 1047
அன்றில் 1010, 1298
அன்றினர், அன்றினார் 1071, 1115
அன்றீன்ற ஆவை அறிந்துகொளகன்று உவமை 447
அன்னதானம் 1306
அன்னப்பேடுகிடைத்தற்கரியது 1148
அன்னை-670—அத்தன்மையாய் 559
அனகன் 815
அனங்கன்முரசு 1326
அனதாரி, அனதாரியப்பர் 1704-5
அனந்தசதுட்டயம் 173, பக். 533
அனந்தபுரத்திருமால் 895
அனந்தர்-மயக்கம் 708
அனந்தன் 1757, 2069

அனந்தையாதிபதி 1250
அனபாயன் 639, 825, 827-32
அனவரதம் 164
அனுங்குதல் 170
அனுப்புதல் 1792
அனுபமன் 794-6
அனுமன் 536
அனுராதாபுரம் பக். 591, 602
அனுரேசர் 1204
அனுரை 938
அக்ஷிணீபுருஷன் பக். 517
ஆக்குரோதித்தல் 899
ஆகண்டலன் 1699
ஆகமநூல் 1812
ஆகவமல்லன் 783, 786; பக். 522
ஆகுதி 819, 865
ஆகுதிநாள் 571
ஆகோண்மன்னர் 431
ஆங்காரம் 1842
ஆங்கூர்ச்சிவன் 1572
ஆச்சு 1739
ஆசமித்தல் 1719
ஆசார்யஹ்ருதயம் 1852, பக். 434
ஆசான் 404, 1552
ஆசிரியமாலை பக். 4, 28 [1530
ஆசிரியர்க்குரிய எண்வகையுறுப்பு
ஆசிரியரது விரதம் 1437
ஆசில் உரைக்கும் கவி 1622
ஆசுகவிராசசிங்கம்-1621—3, 1661;-
ஷையார் மாணுக்கன்பாட்டு 1624
ஆஞ்சிக்காஞ்சி 707
ஆட்கொண்டநாயகன், ஆட்கொண்
டான் 1199, 1584
ஆடகக்குடுமிமாடக்கூடல் 1384
ஆடகமன்றத்து நாடகநவிற்றுதல் 1564
ஆடம்பரகவி 364
ஆடன்-ஆடலுடையான் 54
ஆடாணை 87
ஆடுகள் திருநந்தாவிளக்குக்கு அறமாக
விடுதல் 1053
ஆடுந்தனித்(தெளி) தேன் 1067, 1071
ஆடும்பொழுதில் அறுகயிற்றுப் பாவை
உவமை 721 [1463
ஆடையின்றி வாடையின் மெலிதல்
ஆடையால் துக்கத்திற் கண்புதைத்தல்
ஆண்டார் 1597 [549
ஆண்டான் (புகழேந்தி) 1150
ஆண்டான் குறியை அடிமை மூன்
கையில் அணிதல் 843
ஆண்மக்கள் தாங்கொண்ட சூலறி
ஆணத்திகூறுதல் 899 [யாமை 1768
ஆணூர்ச்சர்க்கரை 1344
ஆத்திசூடிவெண்பா 1775-6
ஆத்திரையன் பேராசிரியன் 1530
ஆத்திரையார் 1122
ஆத்மசன் 892 [காட்டல் 361
ஆதர்க்கு இரட்டிப்பு அறிவின்மை
ஆதரவு 221 [1788
ஆதிசரவணப்பெருமாட்கவிராயர்
ஆதித்தன் (கம்பர் தந்தை) 1516, 1519
ஆதித்தன் கம்பநாடாள்வான் 1516,
1517—8
ஆதித்தன் வஞ்சிமன்னன் 1210
ஆதித்தனுள்ளளவும் அழியாமை 1346
ஆதிநகர் 782
ஆதிநாதர் 1537, 135, 146
ஆதியப்பர் 1961
ஆதியிராமன்கேரளன் 122-3
ஆதியுகம் 811
ஆதிராசன் 889
ஆதிரைநாயகன் பக். 521
ஆதிரையான் 36
ஆதிரையான் பெயராசிரியன் பக். 348
ஆதிவராகம் 442, 798
ஆதிவராகன் 1229
ஆதிவானவன் 113
ஆதுலர்சாலை 1122
ஆப்பனூர் 87 [1581
ஆம்பிமுளைத்தனைய குடைக்காம்பு
ஆமணக்குஞ்சாய்க்குதிரை 1595
ஆமலகம் 983
ஆமா 479
ஆமூர்க்களப்பாளன் 1239
ஆமூர்முதலி 1239
ஆமைமயிர் 1148
ஆமையெம்பெருமான் 1632
ஆமையைப் பூணூல்மேற் சிவபிரான்
ஆய் 1401 [அணிதல் பக். 521
ஆய்த்தியர் 16
ஆய்த்து 1015
ஆய்வேள் 889, 957
ஆயத்துறை 416

1307 மட்டுப் பொதிசண் பகமொட் டுப்பல மலர்வாசக்
கொட்டத் துடனிரு வேரி கொழுங்குங் குமவாசந்
தட்டுப் புழுககில் சந்திர திலகஞ் செறிதயிலம்
இட்டத் துடனள காடவி யினிலின் புறவுய்த்தான். (உகூ)

வேறு.

1308 ஆமல கஞ்சக் தனைகன் பணிநீ ரதனில வைத்தருளும்
பேமுறு மென்குழல் கோ துபு தைவா லெய்தவி யற்றியபின்
காமர் சகத்திர தாரையின் மீமிசை கைக்கம லங்களினுற்
ருமறை சங்கெனு நீணிதி யுட்பல சங்கொலி பொங்கிடவே. ()

1309 பொற்கல சங்களொ ராயிர மெங்கும் பூரித் திடுபுனலைப்
பற்பல மந்திர முறைமுறை கூறிப் பரமனை யாட்டியபின்
சொற்பயின் மத்தள முழவொடு பேரிகை துந்துமி திமிதிமெனக்
கற்பன வா[1]நிலை மத்திம கும்பக் காமரு புனல்பெய்தான். (௩க)

இரண்டுந் தொடர்.

1310 ஈரத் திருவுடை யாடை யகற்றலு மெண்கட் சதுமுகனெஞ்
சார்புற் றெருசுவ ணத்துகி லிறைதிரு வரையிற் சுற்றியபின்
சீர்பெற் றுளதிரு முடியினி லளகத் தினனித் திலமெனவீழ்
நீர்வற் றிடறுண் டுல்சுற் றினன்மன நினைவுட் களிதரவே. ()

1311 கற்றைக் குளிர்சிகை முற்ற வுலர்த்திக் கைவிரல் கொடுகோதி
மற்றெரப்பிலவெனமல்லிகைமுகைகள்மகிழ்ந்தகவயின்வைத்தே
சுற்றத் தொலைவில வாயதை மெல்லச் சுற்றி முடித்தனனன்
புற்றப் பரமன துபதிட தத்துணி வொருதலை யுணர்வுற்றான்.

1312 ஓன்பது கொண்டிமை மும்மைய வாகவு மொன்றுபவீதமெனும்
பொன்பயின்முப்புரிநூலினைமுப்பொறிபொற்புறுமார்பிடையே
தன்பது மக்கா மூற்றுள தாய்வனை தத்துவ மெய்தினன்மாண்
மன்பதை மற்றுள வும்பர் துதித்திடு மாநத பூசையனே. (௩௪)

[பி-ம்.] [1]நிலை. ச.

1313 சுடிகை நுதற்கணி பட்ட மணிக்குழை தோள்வளை கேயூரம்
படியி லிருட்பட லத்தை வெருட்டு பதக்க மணித்தாமம்
அடியில் வளைத்தணி கனகழல் கைவிர லாழிக ளரைநாணோ
டொடியு ளமைத்தன னுன்மறை கற்றுவ ருண்ணுணர் வந்தணர்கோன்.

1314 தண்பனி நீருட னம்பர் நரந்தந் தட்டுப் புழுகொழுகும்
பண்புறு சந்தன குங்கும கலவைப் பரிமள நிறைமார்பத்
தெண்கண னெழுதலு மொண்ணுத லடுவெழு தியதிரு மணிநடுவுட்
கண்களி தரவொளிர் கத்தூ ரியினைக் கவினுற வெழுதினனே.

1315 வனமா லிகைசண் பகமா லிகைமண மலிமந் தாரமெனும்
புனமா லிகைசெங் கழுநீர் கமழும் போருக மாலையொடு
மனவா கனன்மா தவன்வா குவினு மளிசெறி மல்லிகையா
லினமா லிகைமணி மௌலி வளைப்பது மெய்த வணைந்தனனே.

1316 ஆபத் தடியவர் தமைவந் தணுகா தருள்கம லப்பொற்பூ
நாபற் கொளிர்திரு மேனி நலம்பெற நவைதீர் குங்கிலிகத்
தூபத் துடனிருள்புறமிடவேதிசைதொறுமெய்ச்சுடர்தூண்டுந்
தீபத்தினையுமெடுத்தனன்மறைமொழிசிந்தித்தந்தணர்கோன்.

1317 நேசம் பயிலயன் மாதவன் மார்பி னிறைத்த நறுங்கலவை
வாசம் பனிமலர் வாச மதங்கய மாதிர முட்டியபின்
ஈசன் கயிலை யிணங்கிய வண்டமொ டிந்திர னண்டமலா
லாசங் கையதற முட்டிய தாங்கவ னண்ட முகட்டினுமே. (௩௯)

1318 ஏமம் பெறவயன் மாதவன் முன்ன ரியற்றிய பலவாசத்
தூமந் திசையெழு கடலொடு விண்ணிற் சோனை முகிற்படலப்
பாமம் பரிமள முறவைத் ததொடும் பகிரதி யாமெனவே
நாமம் பரிநதி யினையும் பரிமள நதியென வைத்தனவே. (௪௦)

1319 ஒண்சுட ராகிய சீதான் முன்பவ னுந்தியில் வந்தவனும்
வண்சுடர் கொண்டுள தீப நறுஞ்சுடர் மாயிரு ஞாலமெலாம்
விண்சுட ரின்றி விளங்கிய தென்ன விளக்க முறுத்தினதாற்
றண்சுட ரற்றுள கங்குலு நன்பகல் சார்பொழு தாயினதே. (௪௧)

1320 அற்றத் திணையருள் கன்மா ரிக்கா யாதவன் மீச்செலவெற்
பொற்றைக் குடைகொளு மாதவனைக்கா யுதையா தபனுளதாய்
முற்றப் புவனத் திருள்கடி மறுவறு முழுமதி புரைமுத்தின்
கொற்றக் குடையு மெடுத்தன னுந்திக் குளிர்பூ விற்குடையான்.

1321 குடிமைச்[1]சுரர்குடிதழையக்குறளாய்க்குடிமையின்மாவலிமுன்
படிமற் றினிவைத் திடவிட மிலையென வண்ட மளந்தபிரான்
கடிமட் டவிழ்கம லம்புரை கருணைக் கண்முத லியகாண்பான்
படிமக் கலனு மளித்தன னுலகிற் படிமத் தொகைகண்டான். ()

1322 நாடி யனைத்தையு முற்றக் கண்டொளிர் ஞான மெனத்தருகண்
ணாடி படைத்தது தன்னிற் றன்ன தகமுக முங்கண்டே
கோடி யெனத்தரு மைம்பஃ தண்டங் கோடிகள் கண்டானைத்
தேடி யளித்ததெ னாடியை யென்பர் தெசப்பிர மாதியரே. ()

1323 கரைதெரி வருகனை கடலிடை துனைவரு கால்பொரு காலையினிற்
றிரைபொருதெதிரெழுதிறமெனவே திருவெண்சாமரைநிரையிற்
டரையொருபுறனெனவருபுதல்வற்பெறுபரனென்றிமையவர்தோ
மரைமலர் பெறுமொரு சதுமுக ஞல வட்டமு முய்த்தனனே.

1324 அந்தக் கரணமொர் நான்கினுண் மனமென் பதுவே யட்டிலதாய்
மூந்தக் குணமொரு மூன்று மடுப்பாய் மூதுணர் வதுதழலாய்ச்
சந்தத் தருவருண் முருடிந் தனமாய்ச் சாம்பூ நதமதனுற்
சிந்தித் திடுகொள் கலநிறை விரசைத் தெண்ணீ ருலைநீராய். ()

1325 அந்தா மத்துள கற்பத் தருவிங் கருள்வெண் ணெல்லதனுல்
வந்தா தரவுறு தண்டுல மென்பதை வாவி துறக்கழுவிச்
சிந்தா குலமற வடுதலி னறுநெய் செறித்துப் பமைகருணை
நந்தா வளமிகு வாழை பலாமா நானில மீதனவும். (சஎ)

1326 பாலா ழியினன் பால்கற் பகமருள் பலவின் கனிமாவின்
கோலா கலநன் கனிகா ழிலவாங் குளிர்கத லிக்கனியின்
மேலா கியகன் னலின்வட் டெனுமிவை விரவுபு திருமகளான்
மாலார் தாவதி ரதநோடை முதல வகைப்பொற் கலமிசையே.

[பி-ம்.] [1]சேய்குடி. சா.

1327 நண்பிற் றிசைக டொறும்பா ரித்தபின் னடுவண நெடுநிலவார்
வெண்பட் டாடையின் மிசையே விண்மிசை வெள்ளி மலைக்கிணையாம்
பண்பிற் குவிபோ னகமிகு குழைகறி பற்பல தளிகைபடைத்
தெண்கட் புயல்கைம் மணிபல் லியமொ டிரைப்பவு நல்கினனே.

நான்குந் தொடர்.

வேறு.

1328 பையுடை நறுமென் மலரணைப் புனிதன்
பவளவாய்ப் படுத்தமிர் தெனலாய்
நெய்யுடை யனவா மகலின்வாய் நிறைத்து
நினைவினுற் பாகுசெய் தமைத்த
குய்யுடைக் கறியுங் குறுகவே யடுபாற்
குழம்புமுக் கனிகளு முனிவர்
மெய்யுடைத் திருநா சியிற்பரி மளித்தால்
வேறினி யுரைப்பதிங் கெவனோ. (ருo)

1329 திருப்பவ ளமதே விளக்கவும் பதுமத்
திருவடி விளக்கவு மலர்மேன்
மருப்பயில் புனிதப் புனலினைப் பலகால்
வள்ளமீ துறநிறைத் தளித்துஞ்
சுருக்கிய வெண்பட் டினைத்திருப் பவளந்
துவற்றவே வரன்முறை யளித்தும்
விருப்பின்மந் திரதந் திரந் தவறுத
மெய்ம்மையுற் றுளமகிழ்ந் திருந்தான். (ருக)

1330 காதகி தமலால் மத்தளத் தொனியு
நார்செவித் துணைக்குறு வதொடும்
பாதமீ தமைத்த பணிமலர் நிலத்திற்
பரந்துகட் புலப்படு நிலையாற்
சீதளக் கமல மலர்மகள் பிரியாச்
செல்வனைச் சதுமுகத் தவனும்
வேதவே தியன்செய் மானத பூசை
வெளிப்படு பூசையா யினவே. (ருஉ)

1331 ஏந்தலாம் விரிஞ்ச னஞ்சலித் ததன்பின்
னிறைவனை வலம்புரிந் தனனு
வாய்ந்தவென் னிதயத் தினிவரு கவெனு
மதுமலர்க் கமலமெல் லியலாள்
காந்தனவ் வுழிக்கட் புலப்படா நிலைத்தாய்க்
கரந்தனன் காத்தலை மனத்தா
லாய்ந்தறி வரிதா யரிகரி யெனலு
மயர்ந்தனன் றெளிந்தன னதன்பின். (நக)

வேறு.

1332 நனவோ கனவென்றே நாடற் கரிய
கனவோ வெளியுருவாய்க் கண்களெதி ரேநின்
றனவோ கரணங்க ளாற்புணர்த்த மாயை
யெனவோ வெவனோவி தென்றே யிரங்கினனே. (நச)

1333 விள்ளா மழலையின்கை வீழ்ந்தமணி தன்னையதங்
குள்ளா திகழ்ந்துவிடு மூழ்போ லிழந்தனனாற்
கள்ளார் கொழுங்கமலக் கண்ணா மணிவண்ணா
வெள்ளா தடியேற் கிரங்கா யிரங்காயே. (நரு)

1334 என்று னழுதா னிரைத்தெழுந்தா னேத்தொலிகள்
சென்றுதி வானோர் செவியுற் றவர்தூய
குன்று மலர் மாரி யுட்குளித்த கோலத்தாற்
பொன்றாத போதத்தார் போதுளா னுமென்றார். (நசு)

வேறு.

1335 அண்ண லாகமே பொதிதரு மலரிணை யனப்புட்
டண்ணெ ணுவிரு சிறையொலி கொடுபுடை துமிப்பத்
தண்ணந் தாமரை மகளல்லா திமிழ்கடற் றுனை
மண்ணி னரியும் பூமக ளாயினன் மன்னோ. (நஎ)

1336 கருணை யங்கட லிணைநிணை தொறுமனங் களிகூர்
அருண பயங்கயச் செங்கையின் மலர்பொதிந் தகன்ற
வருண மாமலர் கணுவுபு படாமென மறைப்பப்
பொருநை யண்டர்பூங் காவிரி நதியெனப் பொலிந்த. (நஅ)

1337 பண்டு மூாயநான் மறைப்பொரு ளுரைபாய்ப் பதுமன்
றண்டு மூாய்புனை யெந்தைதாட் டாமரைத் தலைப்பெய்
வண்டு மூாய்மல ருகுநறு விருபுடை வழிதேன்
விண்டு மூாயெழு பொழினக ரங்கமாய் விளங்கும். (ருகூ)

வேறு.

1338 இரணியன்முன் னவன்பொருட்டாற் புனல்புகுந்து
விபுதர்மதித் திடவக் கள்வன்
முரணியன்மொய்ம் பினைமுருக்கிக் கொணர்ந்தமயி
லூருவின்கண் முயங்கும் பான்மை
யரணியன்ற மெய்ஞ்ஞான வாதிவரா
கச்சொருபி னண்டம் பூத்தோன்
சரணியமம் புரிந்துநினை பிரமன்மனத்
தனுபூதி தழைதர் தானே. (சுo)

1339 அன்றுலி னிலைத்துயின்ற பெம்மானை
யதன்பின்னு மறமே கூறும்
பொன்றுத பொருளுரையாற் புனிதநறு
மலர்பொழிந்து புந்தி தன்னு
லொன்றுகி யருச்சனைசெய் துகந்தோறு
மூகந்தோறு மொழுகு நாளுட்
குன்றுத குணத்தாந்தன் றனக்கழிவில்
காட்சிகொடுப் பதுவுங் கண்டான். (சுக)

வேறு.

1340 வேத வேதிய வியாதமெய்த் தாந்தனு மேன்மை
மாத வத்தின னெவனவன் கருணைகூர் மாயோன்
பாத பங்கய மடைந்ததெப் படியெனுப் பழிதீர்
போத வாய்மைய கேட்டியென் றுரைத்திடும் புனிதன். (சுஉ)

1341 செய்தொ றும்புரி வளைதவழ் திருநகர்த் திரைசூழ்
வைய கந்தனை வலம்வரு மேதகு மறையோ
ரெய்து மாயிடை வசிட்டன்வந் தெதிர்தலு மிகல்கூர்
பொய்த விர்ந்தசிந் தையர்க்கவன் புகன்றநாய்ப் புகல்கேன். (சுங)

இரண்டுந் தொடர்.

1342 தந்தை வாய்மையைச் செவிக்கொளுஞ் சுகனெனுஞ் சால்பின்
மைந்தன் மாசறச் சதுமறைத் துணிவுணர் மறையோய்
பந்த மாகிய பாசமற் றிடத்தவம் பயிலு
மந்தண் மாதவர் சரிதையெவ் வகைத்தென வறைவான். (சுச)

1343 துற்றி யென்பதொன் றுற்றிடிற் றுய்ப்பவர் துய்த்தல்
பெற்றி டாப்பொழு தினினுமப் பசியடப் பெறுதார்
உற்ற மெய்யினை [1]யுலற்றுவ ருயிரினை யுலற்றார்
சுற்ற மாதவன் றொண்டரே யென்றுபின் றொடர்வார். (சுரு)

1344 நோன்பி னுக்கியல் பாகுவ தாவதொன் றின்மை
தான்பி ணக்கறத் தெளிந்துமா தவனல்லா தவரை
யேன்பி தற்றுவ திறைவரென் றுளத்துறு மெதிகள்
வான்பி றக்கிட நிலத்திழிந் தடிதொழ வாழ்வார். (சுசு)

1345 சிரங்கொள் போதகத் தினாரு மறைபராய்த் தெழிப்பார்
தாங்க வண்புனற் கமண்டலத் தொடுதிரி தண்டுங்
கரங்கொள் வித்தகர் கலையதழ் சவறழீஇக் கவிப்பார்
உரங்கொண் முப்புரி நூலினர் மாவுரி யுடையோர். (சுஎ)

1346 ஆழி மாகட லகத்தகப் படினுகெக் கழியார்
ஊழி வெவ்வழ னனந்தலைக் காப்பினு முட்கார்
பாழி மால்வரை களைச்சிறு பாலெனப் பறித்தே
பூழி யாக்குவன் காலினு மசைவுறாப் பொலிவார். (சுஅ)

1347 கற்ற கல்விகள் யாவையுங் கழறின படியே
நிற்கு நீர்மையர் நிலையிலா தனவிகழ் நெறியார்
பெற்ற போழ்தினு மொருபொருள் பெறுவதற் கிடர்வங்
அற்ற போழ்தினு மொருநிலைத் தாகிய வமைவார். (சுகூ)

1348 இன்சொ லாகரர் பிறவுயிர்க் கெய்திய வின்பத்
துன்பம் யாவையுந் [2]தமவென வவனுறு தொடர்பால்
அன்பு பூண்டன ராகியோ ருயிரென வமைவார்
வன்பு லன்களை யேவல்கொண் டோங்கிய வாத்தார். (எ0)

[பி-ம்.] [1]யுலர்த்துவ ருயிரினை யுலர்த்தார். சா. [2]தமதென வவணுறு. சா.

1349 யாவ ராயினுந் தமக்கிட ரிழைத்திடி லவர்க்கங்
காவ தேதென வவருயிர்க் கழுங்குவ தல்லால்
நோவ தொன்றில ராயநுண் ணறிவினர் துறக்கத்
தேவர் வாழ்வையு நாகெனத் துறந்திடுந் திறத்தார். (எக)

1350 விண்ணு ளார்பெரு மான்றிரு வுருவம்வெள் ளிடைதீர்த்
துண்ணி லாயதா லுணர்ந்துணர்ந் தோகைகூ ருணர்விற்
கண்ணு நெஞ்சமுங் களிதருங் காட்சியே படைத்த
வண்ண மாதவர் பெருமையா ரளவிடு மதியார். (எஉ)

1351 பருதி வானக டுருஞ்சுபல் வரைகளு நதியுங்
கருதி மாதவர் கடந்தபின் ருந்தனுற் சாட்சி
தருதி யானநற் ருனமீ தெவனெனத் தரித்தே
வருதி யானசிந் தையிணதி வடகரை மணந்தார். (எங)

1352 விரசை யோநதி யாயதோ பாற்கடல் வியப்பா
ஞரைசெய் வானவ ரமிர்தமும் பரைத்துறந் திம்பர்த்
திரைசெய் யாறெனப் படர்ந்ததோ வெனத்திரு நதிகட்
கரசை மாதவர் வியந்துதென் கரையினை யடைந்தார். (எச)

வேறு.

1353 *காழகிற் பொழிலுஞ் சந்தனப் பொழிலுங்
கமழ்நறுஞ் சண்பகப் பொழிலுங்
கோழரைக் கமுகு நாளிகே ரமும்பொற்
கோங்கும்வேங் கையுமலர்க் குருந்து
மாழையஞ் சுளைமுட் புறக்கனிப் பலவு
மாவுநா கமும்பனை மருதுந்
தாழையு மகிழும் வாழையுங் கரும்புந்
தனித்தனி தழைத்தெம் மருங்கும். (எரு)

1354 *மரவமுங் கடம்பும் பனசமும் பிடவும்
வடமுமா தவியுமா துளமுங்
குரவமு மிலவுந் திலகமும் விளவுங்
கொன்றையுஞ் செருந்திலுங் குமிழும்

அரசுநா வலுந்தான் றியுமரீ தகியு
மாமல கமுநாக் தமுமாம்
பிரமுமே லமும ராவும்வே முமுஞ்சம்
பீரமுந் தமைந்துள தொருசார். (எசு)

1355 வள்ளையங் கொடியு முல்லையும் விரைமென்
மயிலையு மிருபுடை மயங்கிக்
கொள்ளைவண் டினம்பாண் முரன்றறு பதத்தாற்
குடைந்துதே மதுமடைதிறக்கு
முள்ளுடைக் கொழுந்தாட் கமலமும் விரவி
முறுக்கவிழ் குவளையு மெள்ள
விள்ளிதழ்க் குமுதத் தொகுதியும் பகுதி
விளக்கும்வா விகள்பல பலவே. (எஎ)

1356 ஒழுங்குடைப் பவளக் கொடிக்கிடை தவழ்சங்
குயிர்த்தவெண் ணித்திலக் குவையுஞ்
செழுங் குழும் புறுதண் செதும்பின்மா மணியுந்
திகழ்பசு மணிகளு முலகை
விழுங்கிருட் பிழம்பைத் தெறுகதிர் மணியும்
விரவலா னிழன்மணித் திரள்பெய்
கொழுங்குளிர் படிகத் தமைத்தசெப் பெனவே
கோலம்வாய்த் ததுபுனற் றடமே. (எஅ)

1357 இலங்குசூற் பணில முழுதுதாட் [1]கிளந்த
விண்டைமென் முகையுமிழ் நறவுண்
மலங்குபாய் வதுகண் டாளைவா லறைந்து
வாளைபாய் தொறும்புனன் மறுகா
வலங்குழூம் பழனப் பொறிவரா லுகளித்
தளிக்குழா மிழைத்தமாம் பொதும்பர்க்
குலங்கொடேன் கருவி கிழித்தெழப் பிரசங்
குடமுழா வெனப்புடை தெழிப்ப. (எகூ)

[பி-ம்.] [1]கிளர்ந்த. சா.

1358 வண்டின மதுபான் மூரன்றிடக் குயில்கண்
மணிமுழா வியற்றமா மயில்க
டண்பொழி லாக்கி னடம்பயில் வதையோர்
சார்பிருந் தளியசூட் டெகினம்
வெண்டிரை குளிறு மூறுகடற் புவனம்
விழைவுறப் பரித்தகோ வேந்திற்
கண்டிருந் துவகை தழைப்பது முனிவர்
கண்டிருந் தனர்விழி களித்தே. (௮௰)

வேறு.

1359 வளைக ளாயிரஞ் சூழவாழ் வுறுவலம் புரியின்
கிளைகள் சூழ்சலஞ் சலந்துறை படிந்தொளிர் கிளர்சீர்த்
தளைய விழ்ந்தகாண் மலர்ப்பொழி னகர்வலந் தாலுங்
களைக ணீதென முனிவரும் படிந்துளங் களித்தார். (௮௧)

1360 பூக்கண் மல்கிய பொதும்பர்சார் தென்கரைப் புளினத்
தாக்க முற்றமற் றெருமா வுரியுடீஇ யறவோர்
மோக்க முற்றகே சவனையா தியநுதன் முதல
நோக்க முற்றுரைத் தெழுதினர் திருமண்ணு நோன்பின். ()

1361 வேத நூல்விரித் துரைத்துள வான்முறை விதியிற்
பாத பங்கயம் விளக்கலா தியபவித் திரத்தால்
ஏத மின்றியே யியற்றிய பின்னரின் னமிர்த
மாத வன்றனக் கூட்டிய மானத வகைசார். (௮௩)

1362 அருந்த வத்தினர் நியமம்யா வையுங்கழித் தனரா
யிருந்த நள்ளிடைப் பலவின்வேர்ப் பழுத்துமண் ணிடந்தே
திருந்து தீங்கனி யுறுபசி நிலமக டேர்ந்தே
விருந்து செய்தபோல் விரிந்திட நுகர்ந்தனர் விழைந்தே. (௮௪)

1363 பொதிய மால்வரை பயந்தருள் புதல்வியாம் புனித
நதியெ னப்பெயர் புனைந்தநற் றுய்மன னயந்த
[1]வெதிக ளாமுதல் வருக்கருக் கியப்புன லெனவே
மூதிர்தி ரைக்கையி னிறைத்தனண் முத்தொடு முகந்தே. ()

[பி-ம்.] [1]வெதிகளாம்புதல்வருக். ச.

1364 கடக ரிக்கிடர் தவிர்த்தருள் புரிந்தவன் கருணைத்
திடமு யர்த்திய வுபநிட தத்தினைத் தேர்ந்த
படர்பு கழ்த்தபோ தனரவ னுறைதலும் பருமக்
குடதி சைக்கிரி குறுகினன் பருதியாங் குரிசில். (அசு)

1365 கழைக்கு ழாத்தொடு சந்தனப் பொழிலிரு கரையுந்
தழைக்கும் வார்புனற் பொருநையந் துறைதொறுந் தகைசான்
மழைக்கு ழாமெனக் குழூமிவான் பிடியொடு மதமாப்
புழைக்கை யாற்புனல் குடிப்பன குளிப்பன புதைந்தே. (அஎ)

வேறு.

1366 சீதளக் கமலத் திடைப்படு கமலஞ்
செருக்குடை யாம்பல்கைப் படவே
தாதளை வரிவண் டிரிதரக் கிளைத்துத்
தனதுகோட் டிடைக்கொளப் பொழிலுண்
மாதள வினின்மீச் செலவிட வளைப்புண்
வனப்பொடுங் குவலயத் தினிற்சார்
போதள விடுநால் வகைப்படு மலராய்ப்
புலப்பட மிளிரும்வாழ் வுடைத்தே. (அஅ)

1367 ஆம்பலென் றுமைப்பார் துதிப்பதென் றுதித்தற்
கமைந்துள துதிக்கையின் றதன்மேன்
மேம்படு வெண்பொற் கோட்டினைப் பொருந்தும்
விதியிலீர் பங்கமும் பயமுந்
தாம்படைத் துளரீ ரெனக்குழு தங்க
டாங்குழு தமதுறக் கிழங்கோ
டோம்படை யடைய வுடைந்திட வொருத்த
லூறுபுனற் றடங்குடைந் தெழுமே. (அகூ)

1368 புழைபடு பணைக்கை புனல் குடைபொழுதிற்
புகர்முகக் கரிநிமிர்ப் பதொடுந்
தழைபடும் பொதும்பர்த் துணர்நறை நதியுட்
டடக்கையா ளியுநிமிர்த் தனவுங்

கழைவளர் குடக்குன் றணுகுசெங் கதிருங்
கங்குல்வந் தணுகுவெண் கதிரு
மழைபடி யுபய கடலுணின் றெழுகோள்
வாளரா விரண்டென மருளும். (௬0)

வேறு.

1369 பேய்த்தேரைப் புனலெனவெம் பகலே யோடிப்
பிழையுறுங் கலையினைமீட் டந்தண் சாரற்
சாய்த்தோடுங் குளிர்பொருநைத் தெண்ணீ ராடித்
தழைதாக்காட் டியகலையின் றலைமை சாற்றில்
வேய்த்தோண்மங் கையர்கலவி தனையோ ரின்ப
வெள்ளமெனப் படர்பவர்தம் விருப்பை மாற்றி
வாய்த்தோங்கும் பேரின்ப வளனே காட்டி
மயர்வறுத்த கலைதனையே மானு மன்றே. (௬௧)

1370 தாராவுந் தடஞ்சிறைவன் குருகு நீர்வண்
டானமுந்துற் றுபுகளிப்பத் தளிக்குந் தீந்தேன்
றீராமென் கமலமலர்த் தடங்க டோறுஞ்
சேவலனத் திரளிறவுட் செறிந் தூராய
கூரான முதலியவாய்ந் தார்ந்து மீட்டுங்
கொழுமீனன் குவையலகு கொண்டு விண்போய்
ஆராமம் புகுந்துபெடைக் களிப்பப் பேடை
யவற்றினைப்பார்ப் பினுக்கருத்தி யருந்து மாதோ. (௬௨)

வேறு.

1371 காட்டா வினங்கள் குளிர்புனலைக்
கயவாய் மடுத்துண் டயாவுயிர்த்து
வேட்டா தாவிற் குவிமுலைப்பால்
குழக்கன் றினுக்கு விரைந்துசார்ந்
தூட்டா வழிந்த நறும்பாலொண்
புனலோ டுறவோ திமமலகு
நாட்டா நிறைநீ ரினைப்பிரித்து
நாவைத் தருத்தும் பார்ப்பினுக்கே. (௬௩)

வேறு.

1372 ஒழுகுமான் மதங்க ளளவளாய்ப் புனலு
ளொழுகலு முறுபுன லதனுண்
முழுகுவெண் குருகு பருகியே யவற்றை
மூதுணர் விழந்துதண் டுறைசேர்
பொழுதினுங் கயலோர் [1]பேடைவெண் குருகைப்
புணர்ச்சிசார் தனுதுபே டையெனத்
தழுவுதற் கெழுபோழ் திடைநிலாய்த் தடுப்ப
தனுதுயிர்ப் [2]பேடைவெண் குருகே. (கூச)

வேறு.

1373 கொடுவரியு மடங்கலுங்காட் டாவு மெண்குங்
கொடுந்தொழிற்கே ழலுமாளிக் குழுவுங் கூர்மைப்
படுகொலைமுட் சல்லியமு மான மாவும்
பழம்பகையற் றோருயிர்போற் பழகித் தாகத்
தொடுபுனலுண் டொருங்குகளிப் பனவு நோக்கி
யுரனுடையோர் களுநியம மொருங்கு கூட்டப்
படுகதிர்செய் தெழுபரித்தேர் வெய்யோன் மேலைப்
பனிவரைபுக் கானிருளும் பரந்த தன்றே. (கூரு)

1374 அரக்கரெனப் பெயர்புனைகூற் றுவர்கள் வாழ்நா
ளடியிடப்பூ ரியாக்க மடைய வுள்ளத்
திரக்கமுறுஞ் சுரர்முதலா யினர்தங் தோற்றம்
யாவுமொளி மட்குவபோன் றிருள்வந் தீண்டச்
சுரக்குமொலி புனற்றடத்துட் குமுதம் யாவுஞ்
சோபையடைந் தனவாகத் துளித்துத் தீந்தேன்
புரக்குமலர் முகம்படைத்த புண்ட ரீகம்
புல்லெனலா முகத்தினையே பொருந்து மன்றே. (கூசா)

[பி-ம்.] [1]பேடைவண். சா. [2]பேடையொண். சா.

வேறு.

1375 [1]வேதமாண் பனுவற் புலமையாய்ந் துயர்ந்த
மேதையோன் மேதகு மதத்திற்
போதமூ றினரைப் புணர்க்கவே யொளித்துப்
போனபுன் மதமவ னவரிற்
காதநீ டியசேய்த் தகன்றபின் வெளியிற்
கலித்தறி வழித்தலுங் கடுக்கும்
ஆதவன் கதிர்கள் சுருக்கியே கலுந்தா
ரணியினைப் பொதிந்தகள் ளிருளே. (௬௭)

1376 பாமநீர் வேலை யுலகினெப் பொருளும்
பழிப்பற வுணர்த்து நூ லறிவு
காமமும் பொருளுங் கலித்தவ ரிடத்துக்
கழிந்திடத் தனித்ததம் முணர்வி
ஞமமு மறைந்த தெனக்கதி ரவன்போய்
நாணிலத் தமைந்தவெப் பொருளும்
எழுறும் படிகட் புலங்கொளா வகைகள்
ளிருட்பிழம் பினின்மறைந் தனவே. (௬௮)

வேறு.

1377 அறந்தழைக்க மும்மாரி தழைக்க வேத
மந்தணர்பாற் றழைத்திடவா பயனுண் டாக
நிறந்தழைக்கும் வேல்விழியார் கற்பின் வாய்மை
நிலைபெறச்செங் கோனடத்து நெறியோன் போர்மேற்
றுறந்திடவங் தீண்டுநிலக் குறும்பை யெல்லாந்
துரந்துநிலம் புரந்தவிள வரசிற் சோதி
சிறந்தகதிர் மறையவரு மிருளை யோட்டிச்
சேணிலத்திற் பொடித்ததுவெண் டிங்கண் மன்னோ. ()

[பி-ம்.] [1]வேதமாம், சு.

1378 இருட் பான்மை துரந்தமிர்த கிரணத் தோங்கி
யிருநிலம்பொற் புறவெழுந்த மதிய நுண்ணூற்
பொருட்பான்மை முழு துணர்ந்த புலவர் நாவிற்
புதுமொழிதோய்ந் தமைச்சனுரை புணர்ந்தா னாகி
மருட்பார்வை புறங்கடிந்து கடுஞ்சொற் றீர்ந்து
மன்னுயிர்கட் கெல்லாமோ ருயிரே போல
அருட்பார்வை புரிந்தினிய வாய்மை கூர்மன்
னவன்குளிர்வெண் குடையொடுதண் ணளியு மானும். ()

வேறு.

1379 கல்வியுங் கவியும் வாய்ந்தவள் ளலினாற்
கல்வியுங் கவியும்வாய்ந் தவர் நூல்
செல்வமுற் றெழுக வவனகன் றிடலுஞ்
சிறிதுகல் வியுங்கவி தையுஞ்சார்
நல்குர வினனல் கூர்ந்துளா ருரையை
நயந்ததை மறைத்தபோற் கதிர்போய்ப்
புல்லெனக் கமலங் களங்கனுற் குமுதம்
பொதியவிழ்ந் தழகுவாய்ந் ததுவே. (௧0௧)

1380 மறுவிலாப் புலமை மன்னவன் புலமை
மறுவிலார்க் களித்தவான் சிறப்பைச்
[1]சிறுமைசார் புலமைக் குறும்பர்புன் புலவர்
திரள்கொளப் புரந்ததே பொருவு
முறுகதிர் பகற்செய் தொளிர்நறுங் கமல
மொளிகெடக் கங்குல்வந் துதித்த
குறுமுயற் களங்க னெழில்செய மலர்ந்து
குமுதமெய் தியசிறப் பதுவே. (௧0௨)

1381 அமலனுங் கொழுந னடிபணி வதலா
லறக்கட வுளரையும் பணியா
விமலமங் கையர்கற் புடைமைவன் கொடுங்கோல்
வேந்தராற் பொலிவழிந் ததொடுங்

[பி-ம்.] [1]சிறுமைசால், கா.

குமரர்கைப் பொருளே வேட்டவே சையர்தங்
குடிசிறப் படைந்ததும் பொருவும்
கமலம்வீ றழியக் குமுதம்வாய் நெகிழ்ந்து
களங்கனல் வனப்படைந் ததுவே. (கQரு)

வேறு.

1382 கள்ளு டைத்தெழு முள்ளுடைத் தாட்கொழுங் கமலம்
வள்ளி தழ்க்கத வடைப்பமீ ளாததின் வைகும்
பிள்ளை வண்டொடுஞ் சுரும்பின மிழற்றிசை பெரியோ
ருள்ளு வந்துதண் டேளபமரர் பணிநினைந் தொருங்கே. (கQச)

1383 நதியின் வாழ்வையு நகரின்வாழ் வையுநபந் தனராய்த்
துதிசெய் வாய்மையி னுறைதலுந் தீவினை தொடர்ந்தே
பதிசெய் வேடுவ னொருவனே டடுபுழைப் பணைக்கைக்
குதிகொண் மும்மதக் கரிமலைந் தமைசொலக் குறித்தேன். ()

பன்னிரண்டாவது:

திருவாராதனச்சருக்கம் முற்றும்.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தில் விற்கப்பெறும் புத்தகங்கள்.

சங்கப்பிரசுரம்.

		ரூ.	அ.	பை.
1.	ஞானாமிர்த மூலமும் உரையும்	1	0	0
2.	சைவமஞ்சரி	1	8	0
3.	யாப்பணியிலக்கணங்கள்	0	10	0
4.	வைத்தியசாரசங்கிரகம்	5	0	0
5.	பன்னூற்றிரட்டு	3	0	0
6.	மகாபாரதம் அரும்பதவுரையுடன்	4	0	0
*8.	தமிழ்ச்சொல்லகராதி உயிர்வருக்கம் முடிய. முதற்பாகம்.	6	0	0
	ஷை இரண்டாம்பாகம்	4	8	0
	ஷை மூன்றாம்பாகம்	5	0	0
10.	தொல்காப்பியம் செய்யுளியல் (நச். உரை முதலிய) ...	1	12	0
11.	திருவருணைக்கலம்பகம்	0	6	0
12.	அமுதாம்பிகைபிள்ளைத்தமிழ்	0	8	0
13.	கலைசைச்சிலேடைவெண்பா	0	6	0
14.	தொல்காப்பியப் பொருளதிகார ஆராய்ச்சி ...	1	4	0
15.	திருவாரூர் நான்மணிமாலை	0	4	0
	பன்னூற்றிரட்டு (செலக்ஷன்)	0	4	0
	திருவாலவாய்த் திருநீற்றுப்பதிகம் முதலியன ...	0	1	0

செந்தமிழ்ப்பிரசுரம்.

		ரூ.	அ.	பை.
*1.	ஐந்திணையைம்பது உரையுடன்	0	3	0
2.	கணூல் (5) இனியதுநாற்பது (உரையுடன்) ...	0	3	0
4.	புலவராற்றுப்படை	0	3	0
6.	நேமிநாதம் (உரையுடன்)	0	12	0
*7.	திருநூற்றந்தாதி (உரையுடன்)			
8.	திணைமாலை நூற்றைம்பது (உரையுடன்) ..	0	8	0
*9.	அநுமானவிளக்கம்			
10.	அட்டாங்கயோகக்குறள்	0	2	0
12.*	பன்னிருபாட்டியல்			
13.	நான்மணிக்கடிகை (பழைய உரை)	0	4	0
14.	மூத்தொள்ளாயிரச்செய்யுட்கள்	0	2	0
15.	திருச்செந்திற்கலம்பகம்	0	3	0
16.	திருவாரூருலா	0	8	0
17.	சுகசந்தர்சனதீபிகை	0	12	0
18.	இயற்கைப்பொருட்பாடம்...	0	4	0
19.	தேவையுலா	0	3	0
20.	நரிவிருத்தம்	0	2	0
21.	சிதம்பரப்பாட்டியல் (உரையுடன்)	0	8	0
22.*	திருக்கலம்பகம் (ஷை)			
24.	குருமொழிவினாவிடை	0	1	0
25.	கேசவப்பெருமாள் இரட்டைமணிமாலை... ...	0	2	0
26.	திருத்தணிகைத்திருவிருத்தம்	0	1	0
27.	மதுரைத்திருப்பணிமாலை...	0	8	0
28.*	சந்திராலோகம்			
30.	ஞானாமிர்தக்கட்டளை	0	3	0
31.	பாண்டியம்	0	4	0

32.	மநீஷாபஞ்சகம்	0	8	0
33.	வேளிர்வரலாறு	0	8	0
34.	அகப்பொருள்விளக்கம்	1	4	0
36.	உவமானசங்கிரகம்	0	1	0
37.	மாறனலங்காரம் மூலமும் உரையும்	4	8	0
38.	திருப்புல்லாணிமாலை	0	2	0
39.	பழமொழி மூலமும் பழையஉரையும் (முதல் 100 செய்)	1	0	0
40.	திருமாலிருஞ்சோலைமலை அழகர்பிள்ளைத்தமிழ் ...	0	8	0
41.	பொருட்டொகைநிகண்டு	0	6	0
42.	அகராதிநிகண்டு	0	12	0
43.	மேகவிடுதூது	0	2	0
44.	திருக்குற்றாலமாலை	0	2	0
45.	தண்டலையார்சதகம்	0	4	0
46.	இராமோதந்தம்	0	3	0
47.	பழமொழிமூலமும் பழைய உரையும் (2-வது 100செய்)	1	0	0
48.	சேதுநாடும் தமிழும்	0	6	0
49.	கடைவள்ளலார்காலம்	0	6	0
50.	தமிழரும் ஆந்திரரும்	0	4	0
51.	மதங்கசூளாமணி	1	0	0
52.	கூடற்புராணம்	0	10	0
53.	திருவள்ளுவர்	0	6	0
	ஷை ஆங்கிலத்தில்	0	6	0
54.	அரும்பொருள்விளக்க நிகண்டு ...	1	4	0
55.	மாறனகப்பொருளும் திருப்பதிக்கோவையும் ...	0	12	0
56.	பாப்பாவினம்	0	10	0
57.	மதுரைமும்மணிக்கோவை	0	5	0
58.	பழனிப் பிள்ளைத்தமிழ்	0	3	0
59.	கடம்பர்கோயில் உலா	0	6	0
60.	சங்கரநயினார்கோயில்அந்தாதி	0	6	0

மேலேகண்ட சங்கப்பதிப்பில்லாத புத்தகங்கள் வேண்டுவோர் வேறு புத்தகசாலைகளுக்குத் தாங்களே நேரில் எழுதிப் பெற்றுக்கொள்ளவேண்டும்.

* இவ்வடையாளமிடப்பட்டவை இப்போது கைவசமில்லை.

குறிப்பு:-1. சங்கத்தினின்று மாதமொருமுறை அரிய பெரிய விஷயங்களைக்கொண்டுவெளியாகிவரும் இச் "செந்தமிழ்"ப்பத்திரிகைக்கு வருஷச்சந்தா ரூ 4. தனிப்பிரதியின் கிரயம் அணா 8. வெளிநாடுகளுக்கு வருஷச்சந்தா ரூ 4—8—0. இதுவரை 31 தொகுதிகள் பூர்த்தியாயிருக்கின்றன. இவற்றுள் 1, 2, 3, 7, 8, 9, 10, 16-ம் தொகுதிகள் கைவசமில்லை. பைண்டு செய்யப்பெறாததொகுதிகள் தொகுதி 1-க்கு ரூ 4—0—0-வீதமும், பைண்டு செய்யப்பெற்ற தொகுதிகள் தொகுதி 1-க்கு ரூ 4—12—0 வீதமும் விற்கப்பெறும். வி. பி. சார்ஜ் பிரத்தியேகம்.

2. சங்கப்பிரசுரம், செந்தமிழ்ப்பிரசுரம், செந்தமிழ் முழுத்தொகுதி—இவற்றுள் ஒவ்வொருபுத்தகத்திலும் ஒரேதடவையில் 10 பிரதிகளும் அதற்கு மேற்பட்டும் வாங்குவோர்கட்கு மொத்தக்கிரயத்தொகையில் 100க்கு 10 வீதம் கமிஷன் தள்ளிக்கொடுக்கப்படும்.

T. S. P. P. MADURA-'35

லக்ஷ்மீநாராயணையர், மானேஜர்.